பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 14 வெள்ளிக்கிழமை (30.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 308

# இன்று மாலை 'பொங்குதமிழ்' குடாநாடு எழுச்சிக் கோலம்!

## லட்சக்கணக்கில் மக்கள் திரள்வர் விரிவான ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர் 30

தமிழீழத் தனியரசை அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்திடம் கோரி யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் இன்று 'பொங்குதமிழ்' பேரெழுச்சி நிகழ்வு இடம்பெறுகின்றது. முன்னெப்போதும் இல்லாதவாறு பெருமெடுப்பில், இன்று மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் லட்சக் கணக்கான மக்கள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுவதாக பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் பொங்குதமிழ் எழுச்சியை முன்னிட்டு யாழ்.குடாநாடெங்கும் பெரெழுச்சிக் கோலம் பூண்டிருக்கிறது. நிகழ்வுக்கான சகல ஏற்பாடுகளும் முழுமையாகச் செய்து முடிக்கப் பட்டிருக்கின்றன என்று ஏற்பாட்டாளர்கள் நேற்று மாலை அறிவித்தனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

### பொங்குதமிழுக்கு ஆதரவாக வடமராட்சியிலிருந்து பேரணி

யாழ்ப்பாணம்,செப்.30

வல்வெட்டித்துறையிலிருந்து நேற்று சுமார் 150 மாணவர்கள் பாதயாத்திரையாக பொங்கு தமிழ் பானை வைக்கப்பட்ட பல்லக்கை சுமந்தவாறு யாழ். பல்கலைக்கழக மைதானத்தை வந்தடைந்தனர்.

நேற்றுமுற்பகல் 10 மணியளவில் வல்வை முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலிலிருந்து மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பாதயாத்திரையாகப் புறப்பட்டனர்.

இந்த பாதயாத்திரை வல்வைச் சந்தி, உடுப்பிட்டி, வல்லைவெளி, ஆவரங்கால் - புத்தூர் வழியாக யாழ். பல்கலைக்கழக மைதானத்தை வந்தடைந்தது.

வீதிகளில் குழுமிநின்ற மக்கள் யாத்திரைக் குழுவினருக்கு நீராகாரம் வழங்கினர். (எ-9)



பொங்குதமிழுக்கு அணி சேர்க்கும் வகையில் வடமராட்சி மாணவர்கள் நேற்று ஆரம்பித்த பேரணியை படத்தில் காணலாம். (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## ஐரோப்பிய ஒன்றிய அறிவிப்புக் குறித்து புலிகள் - கூட்டமைப்பினர் ஆராய்ந்தனர்

கிளிநொச்சி,செப்.30

விடுதலைப் புலிகளின் தூதுக்குழு பயணம் செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடைவிதித்தமை தொடர்பாக, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூடி ஆராய்ந்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு நேற்றுக்காலை முதல் மதியம்வரை கிளிநொச்சியில் நடைபெற்றது.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக மாவை.சேனாதிராஜா எம்.பி.உதயனுக்கு கருத்துத் தெரிவித்தபோது -

ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவிப்புக் குறித்து நேற்றைய சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. மேற்படி அறிவிப்புக் குறித்து அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் ஒரு தடவை கூடி இது தொடர்பாக இராஜதந்திர (16 ஆம் பக்கம் பார்க்க)

### ஏ-9 ஊடான போக்குவரத்தை தவிர்க்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.30

பொங்குதமிழ் நிகழ்வு இன்று எழுச்சியுடன் நடைபெறவிருப்பதால் இன்றைய தினம் ஏ-9 வீதி ஊடான பொதுப்போக்குவரத்தைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பொங்கு. தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர்.

குடாநாட்டின் சகல பகுதிகளுக்குமான போக்குவரத்துச் சேவைகள் இன்று மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறும். அதுபோலவே ஏ-9 வீதி ஊடான போக்குவரத்துச் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் என்றும் கூறப்பட்டது. (த)

## சு.கவின் கொள்கையில் மாற்றத்துக்கு இடமேயில்லை என்கிறார் சந்திரிகா!

### அவர் காட்டமாகச் சீற மௌனம் காத்தனர் பிரதமர் உட்பட கட்சியின் மூத்த பிரமுகர்கள்

கொழும்பு, செப்.30

இனப்பிரச்சினைக்கான தீர்வு, ஆழிப் பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுகள் ஆகிய மூன்று விடயங்களிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கொண்டிருக்கும் கொள்கைகளில் மாற்றங்களைச் செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லையென்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட கட்சியின் மூத்த பிரமுகர்களான அமைச்சர்கள் மத்தியில் இவ்வாறு காட்டமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்துக்கூற அவர்கள் மௌனம் காத்து அதனைச் செவிமடுத்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணான அம்சங்கள் அடங்கிய உடன்பாடுகளை சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் ஜே.வி.பி.யுடனும், ஜாதிகஹெல உறுமயவுடனும் செய்துகொண்டார் என்பது தெரிந்ததே.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.கா. முன்வைத்த 19 யோசனைகளையும் சந்திரிகா, மஹிந்த, ரணில் மூவருமே ஏற்றனராம்

### யாரை ஆதரிப்பது என்ற முடிவை எடுப்பதில் தெளிவாக இருக்கிறாராம் ஆறுமுகனார்

கொழும்பு, செப்.30

''ஜனாதிபதித் தேர்தலையொட்டி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த 19 அம்சக் கோரிக்கைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய மூவருமே ஏற்றிருக்கின்றனர். தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்ற விடயத்தில் இ.தொ.கா. மிகமிகத் தெளிவாகவே இருக்கிறது. இ.தொ.கா. அதனை உரிய நேரத்தில் அறிவிக்கும்.''

-இவ்வாறு நேற்று 'உதயனு'க்கு உறுதியாகக் கூறினார் இ.தொ.கா. தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான். [illegible]

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு இன்று கூடுகிறது

### முக்கிய திருப்பங்கள் வர வாய்ப்பு!

கொழும்பு, செப்.30

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் இன்று கூடவுள்ள அக்கட்சியின் மத்திய குழு, முக்கியமான [illegible] தொடர்பில் தீர்மானங்களை எடுக்கவுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் இன்றுமுற்பகல் பதினொரு மணிக்கு நடைபெறும் இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன மத்திய குழுவில் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




பொங்குதமிழில் மக்களை அணிதிரளுமாறுகோரி வடமராட்சிப் பகுதி மாணவர் ஆரம்பித்த பேரணி நேற்று யாழ். பல்கலைக்கழகம் நோக்கி புறப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்: எஸ்.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)

# அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாக தபால்சேவை விரைவில் பிரகடனம்!

## அரசு தீவிர ஆலோசனை

கொழும்பு,செப். 30

தபால்துறை ஊழியர்களின் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை முடிவிற்குக் கொண்டுவருவதற்காகத் தபால்துறை தொழிற்சங்கங்களுடன் அரசு நடத்திய பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்திருப்பதையடுத்து, தபால் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்துவதற்கு அரசு ஆலோசித்து வருகிறது.

19 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தபால்துறைத் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வரும் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், இல்லாத பட்சத்தில் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய தபால் மூலவாக்களிப்பு பாதிப்படையலாமென்றும் சுட்டிக்காட்டி தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தபால், தொலைபேசி தொடர்புகள் அமைச்சின் செயலாளருக்குக் கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

இது குறித்து நேற்று 'உதயன்' இற்குக் கருத்துத் தெரிவித்த தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர் டி. எம். ஜயரட்ண, தேர்தல் ஆணையாளரின் கோரிக்கைக்கமைய இவ்விடயத்தில் உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தபால்துறைத் தொழிற்சங்கங்களின் இந்தக் குறைபாடு இன்று நேற்று முன்வைக்கப்பட்டதல்ல. பல வருட காலம் நிலவும் இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாண முடியாது. தொழிற்சங்கங்களுடன் இது பற்றிப் பேசியபோது ஓரிரு மாதங்கள் அவகாசம் கோரினோம். ஆனால், அதனை ஏற்காமல் உடனடியாகத் தீர்வைத் தரக்கோரி அநீதியான போராட்டமொன்றை தபால்துறைத் தொழிற்சங்கங்கள் நடத்துகின்றன.

இப்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டப்படி வேலை செய்யும் போராட்டம் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பைப் பாதிக்கலாமென்பதால் இதற்கான மாற்று நடவடிக்கை எடுப்பதற்கு நாம் சிந்தித்து வருகிறோம். தபால் சேவையை அத்தியாசிய சேவையாகப் பிரகடனப்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்படுகிறது. கூடிய விரைவில் உரிய தீர்மானம் எடுக்கப்படும்.

- இவ்வாறு அமைச்சர் மேலும் கூறினார். (எ)



நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது ஆலயத்திற்கு வருகை தந்த அடியவர்களினால் கைதவற விடப்பட்ட பொருள்கள் உரியவர்களிடம் இனம்காணப்பட்டு நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் இவ்வாறு கை தவறவிடப்பட்ட பொருள் ஒன்றை உரியவரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

## வலி.தென்மேற்கில் நேற்று பிரசாரம்

வலி.தென்மேற்கு,செப்.30

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் கிராமங்கள் தோறும் பொங்குதமிழ் எழுச்சியை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக மாணவர்களாலும் மற்றும் பொது அமைப்புக்களாலும் தீவிர பிரசாரம் நடத்தப்பட்டுள்ளது.

அரங்க செயற்பாட்டுக் குழுவினர் நேற்றும், நேற்று முன்தினமும் மானிப்பாய், சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, மாதகல் ஆகிய பகுதிகளில் அரங்க செயற்பாட்டு நிகழ்வுகளை மேற்கொண்டு பொங்குதமிழ் எழுச்சி பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர். (எ-135)

# ஹெல உறுமயவின் யோசனைகள் பிரதமரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்!

## உள்ளடக்கப்பட்டுள்ளன என்கிறார் ரத்ன தேரர்

கொழும்பு, செப்.30

"ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்தவுக்கு ஆதரவு வழங்குவதற்காக நாம் முன்வைத்த அனைத்து யோசனைகளையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியுள்ளார்."

-இவ்வாறு உறுதியாக நேற்றுத் தெரிவித்தது ஜாதிக ஹெல உறுமய. கொழும்பில் நேற்று மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது கட்சியின் சார்பில் இந்தத் தகவலை வெளியிட்டார் நாடாளுமன்ற உறுப்பினரான வண. அத்துரலியே ரத்ன தேரர். அவர் மேலும் கூறியதாவது:-

"பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பதற்காக நடத்தப்பட்ட பேச்சுகளில் ஜாதிக ஹெல உறுமயவும் கலந்துகொண்டது. ஹெல உறுமய முன்வைத்த யோசனைகள் ஏற்கப்பட்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டு விட்டன. இனி வெள்ளிக்கிழமை முப்பதாம் திகதி (இன்று) முதல் நாம் பிரதமருக்கு ஆதரவான பிரசாரங்களை தனியே மேற்கொள்வோம்."

-இவ்வாறு வண. அத்துரலியே ரத்ன தேரர் மேலும் குறிப்பிட்டார். (எ-க)

## ஒஸ்லோ, டோக்கியோ உடன்பாடுகள் மூலம்

# விடுதலைப் புலிகளுக்குத் தமிழீழத்தை தாரைவார்க்கப் போகின்றாரா ரணில்?

## ஜாதிக ஹெல உறுமய கேள்வி

கொழும்பு, செப்.30

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஒஸ்லோ மற்றும் டோக்கியோ உடன்பாடுகளை விடுதலைப் புலிகளே நிராகரித்திருக்கும் நிலையில் ஐ.தே.க. தலைவர் அவற்றைத் தூக்கிப் பிடிப்பது தமிழீழமொன்றை தாரைவார்ப்பதற்காகவா?

-இப்படிக் கேள்வியெழுப்பியிருக்கிறது ஜாதிக ஹெல உறுமய.

பௌத்தாலோக மாவத்தையிலுள்ள சாந்தி மன்றத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்ற போது அக்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வண. எல்லாவல மேதானந்த தேரர் இக்கேள்வியை எழுப்பினார். அவர் மேலும் கூறியதாவது:-

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்கப் போவதாகத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருக்கும் ரணில், தமிழீழத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

ஒற்றையாட்சியின் கீழ் தீர்வை வழங்க முடியாத ஐக்கிய தேசியக் கட்சி சாதாரண பிரச்சினைகளை எப்படித் தீர்க்கும்?

நவம்பர் 17ஆம் திகதியை விடுதலை நாளாகவே ஹெல உறுமய கருதுகிறது. 1505ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தனர். அதன்பின்னர், நோர்வே மற்றும் பல வெளிநாட்டுச் சக்திகளினால் நாடு சீரழிந்துபோனது. இப்போது நவம்பர் 17ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுடன் நாட்டுக்கு விடுதலை கிடைக்கப்போகிறது.

-இவ்வாறு வண. எல்லாவல மேதானந்த தேரர் மேலும் கூறினார். (எ-க)

## பாதுகாவலர் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.30

வடபகுதியில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட பொதுமக்கள், பெற்றோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு சங்கச் செயலாளரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

காணாமற்போனோரின் மரண அத்தாட்சிப் பத்திரம் மற்றும் நஷ்டஈடு பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்காக இந்த விசேட கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என்று சங்கத்தின் செயலாளர் திருமதி து.கமலநாயகி அறிவித்துள்ளார். (எ)

## கலைமாணி பெறுபேறு வெளியானது

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட 2001ஆம் கல்வி ஆண்டு மாணவர்களின் கலைமாணி பட்டம் பெறுவோரின் பெயர் விவரம் நேற்று வெளியானது.

இந்தப் பெறுபேறுகளின்படி 157 பேர் கலைமாணிப்பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பட்டம் பெறுவோர் யாழ்.பல்கலை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிற்கு நேரில் சமுகமளித்து தமது பெறுபேற்றுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று உதவிப் பதிவாளர் கேட்டுள்ளார். (எ-12)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.30

பலாலி பழைய ஆசிரிய மாணவ சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறும் என பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (எ)

## மோ.சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,செப்.30

இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கிடையிலான விபத்தில் சிக்கி படுகாயமடைந்த மூவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொக்குவில், பூநாறி மரத்தடிப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர்களான கனகரத்தினம் ஓங்காரரூபன் (வயது - 25), சதாசிவம் பத்மாவதி (வயது - 55), கொக்குவிலைச் சேர்ந்த நடேசபிள்ளை ராஜன் (வயது - 17) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (எ-12)

தமிழீழம் இழிவானதா....?
எங்கள் தன்மானம் மலிவானதா.....?
சர்வதேசத்திடம் இன்றைய நாளில் உரத்துக் கேட்போம்!

"நான் என்னோடஅம்மா, அப்பா, மற்றவர்களுக்கும் சில விடயங்களை சொல்ல விரும்புறன் எல்லாப்பிள்ளைகளையும் போல எனக்கும் கருத்துக்களை சொல்லுற உரிமை உண்டு என நினைக்கிறன்."

* பிள்ளைகளுக்கு பெரியவர்கள் சொல்பவை ஆயிரம். பிள்ளைகளும் பெரியவர்களுக்கு சொல்ல விரும்புவார்களல்லவா...?
* பெரியவர்கள் சொல்வதில் நியாயங்கள் உண்டு. பிள்ளைகள் சொல்வதிலும் நியாயங்கள் இருக்கலாமல்லவா?

வளர்ந்தவர்கள் சொல்வதை பிள்ளைகள் அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள். பிள்ளைகளும் வளர்ந்தவர்களுக்கு தமது கருத்துக்களை சொல்லவிரும்புகிறார்கள். கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோமா? (40475)(51-11)

நாளை உலக சிறுவர் தினம் அவர்களின் கருத்துக்களுக்கும் செவிமடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தென்னிலங்கை ஒருமித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும், பிரதான வேட்பாளர்களுள் ஒருவருமான ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டிருக்கின்றார். அதில் அவர் சுட்டிக்காட்டியுள்ள ஒரு விடயம் குறிப்பிடத்தக்கது.

'பிரிவினைக்கு முற்றுப்புள்ளி' என்ற உபதலைப்பில் அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில், கடந்த கால அரசியல் குறித்து அவர் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

*''வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குக் கடந்த காலத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபை மூலம் தீர்வு காண்பதற்கு வாய்ப்பு இருந்தது. பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தீர்வு காணக் கூடிய சந்தர்ப்பம் இருந்தது. அதன் பின்னர் மாகாணசபை மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் நிலைமை இருந்தது. ஆனால், தெற்கில் வாழும் நாம் பிரிந்திருந்ததால் சகல சந்தர்ப்பங்களும் நழுவிவிட்டன.''- என்கிறார் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ரணில்.*

இதைத்தான் கடந்த வருடத்துக்கு முந்திய வருடம் நவம்பரில் தாம் நிகழ்த்திய மாவீரர் தின உரையில் மிக விளக்கமாகவும் - மிகத் தெளிவாகவும் - எடுத்துரைத்திருந்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

*''காலங்காலமாகத் தமிழருக்கு உரிமையை மறுத்துவரும் சிங்கள இனவாதத்தின் முகமூடி கிழிந்துவிட்டதால் அதன் உண்மையான - அசிங்கமான - முகத்தை உலகம் காணக்கூடியதாக இருக்கின்றது. முடிவில்லாத ஒரு துன்பியல் நாடகமாகத் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்கின்றது. எமது பிரச்சினைக்குத் தீர்வு காண ஆளுங்கட்சி முயற்சிப்பதும், எதிர்க்கட்சி எதிர்ப்பதும், பின்பு எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாக மாறி மீண்டும் அதே முயற்சியும் அதே எதிர்ப்புமாக, இந்தச் சிங்கள அரசியல் வரலாற்று நாடகம் தொடர்ச்சியாக ஒரே பாணியில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக மேடையேறி வருகின்றது. இலங்கையில் மாறிமாறி ஆட்சிப்பீடம் ஏறும் இரு பெரும் சிங்கள அரசியல் கட்சிகளுமே தமிழர்களுக்கு விரோதமான இந்த விபரீத நாடகத்தின் இயக்குநர்கள். இந்த இனவாத நாடகத்தின் கதாநாயகர்கள் காலத்திற்குக் காலம் மாறியபோதும் கதையின் கருப்பொருள் மாறவேயில்லை. இப்போது கொழும்பில் உருவாகியிருக்கும் அரசியல் நெருக்கடியும் இந்த அபத்த நாடகத்தின் அப்பட்டமான வெளிப்பாடுதான். தமிழர்களைப் பகடைக்காய்களாகப் பாவித்து ஆடப்படும் இந்தச் சதுரங்க விளையாட்டின் எதிர்விளைவாக எத்தனையோ சமரச முயற்சிகள் முறிந்து போயின; எத்தனையோ உடன்பாடுகள் கிழித்தெறியப்பட்டன; எத்தனையோ ஒப்பந்தங்கள் செயலிழந்து செத்துப்போயின. இதனாலேயே தமிழரின் பிரச்சினை தீர்வின்றித் தொடர்கின்றது. காலத்தால் மோசமாகித் தமிழரின் அவல வாழ்க்கை தொடர்கின்றது.*

-இவ்வாறு சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தலைவர் வே.பிரபாகரன் சுட்டிக்காட்டிய விடயத்தை வேறு வார்த்தைகளில் இப்போது கூற முனைகின்றார் ரணில் விக்கிரமசிங்க. இதுதான் யதார்த்தம்; உண்மையும் கூட.

தலைவர் பிரபாகரன் கூறியதுபோல கதாபாத்திரங்கள் - கதாநாயகர்கள் - மாறுகிறார்கள். ஆனால், அந்த அபத்த நாடகத்தின் கருப்பொருளும், கதையும் மாறப்போவதேயில்லை.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் கதையின் முக்கிய பாத்திரங்களாக இருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்ற இரு பாத்திரங்களில் சந்திரிகா குமாரதுங்க இன்னும் ஏழு வாரங்களில் வேடத்தைக் கலைத்து, நாடக மேடையிலிருந்து இறங்கி, ஒதுங்கி விடுவார். களத்தில் ரணிலோடு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்ற புதிய கதாபாத்திரம் முன்னுக்குத் தள்ளப்படும். அதன் பின்னரும் அபத்த நாடகம் இதே அபஸ்வரத்துடன் தொடரத்தான் போகின்றது.

இந்த அவல நாடகத்தின் கதையை மாற்றியமைப்போம் என்பதுதான் ரணிலின் இப்போதைய அழைப்பு.

இதே அழைப்பைத்தான் 1994இல் தாம் ஆட்சிப்பீடமேறிய போதும், பின்னர் 2000ஆம் ஆண்டில் தன்னிச்சையாக ஓர் அரசமைப்புத் திட்ட நகலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த சமயத்திலும் ஜனாதிபதி குமாரதுங்க விடுத்தார். ஆனால், அழைப்புக்கு அப்பால் எதுவுமே நடக்கவேயில்லை. தென்னிலங்கையில் இணக்கம் ஏற்படவேயில்லை.

ரணில் விக்கிரமசிங்கவோ, மஹிந்த ராஜபக்ஷவோ - இந்த இருவரில் யார் இம்முறை வென்றாலும் - அவர் ஆட்சிப்பீடம் ஏறி, அதிகாரத்தைக் கைப்பற்றியதும் அவரும்கூட இப்படியான அழைப்பைத் தன்பங்குக்கும் வெளியிடுவார் என்பதும் எதிர்பார்க்கத்தக்கதுதான்.

ஆனால், இத்தேர்தல் முடிவை அடுத்து உடனடியாகக் கையோடு வரக்கூடிய பொதுத் தேர்தலைத் தமக்குச் சாதகமாக மாற்றுவதற்காகவும், அதிகாரத்தில் ஏறியுள்ள ஜனாதிபதியின் காலை இழுத்து விழுத்துவதற்குமாக, இத்தேர்தலில் தோற்ற தரப்பு 'மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியதுபோல' இனவாதப் பிசாசாக மாறி, மேலாண்மைவாத முருங்கையில் ஏறும்.-இதுதான் நடக்கப் போகின்றது.

மாவட்ட அபிவிருத்திச் சபையையோ, அல்லது அதன் பின்னர் மாகாண சபையையோ வழங்கி, பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு எமக்கு முன்னர் இருந்த வாய்ப்பைத் தென்னிலங்கையரான நாம் பிரிந்து நின்றதால் இழந்தோம் என்று இப்போது புலம்பும் ரணில் விக்கிரமசிங்க போன்றோர், இன்னும் கொஞ்சக்காலம் சென்று 'சமஷ்டி முறையைக் கொடுத்தும் இனப்பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். அதையும் தவறவிட்டுவிட்டோம்.'- என்று மன வருத்தப்படவேண்டி இருக்கும். தென்னிலங்கை அரசியல் போக்கு அத்தகைய எதிர்காலத்தைத்தான் அதற்குத் தரப்போகின்றது என்பது நிதர்சனமாகிவருகின்றது.

சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாமல்போனால் பிரிவினை தவிர்க்க முடியாததாகும்.

அந்த நிலையில், தென்னிலங்கை வருந்துவதோ, அதைத் தடுப்பதற்கு முயற்சிப்பதோ 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூட முனையும் செயலாக' இருக்கும். அல்லது 'கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்ய முயலும்' வேலையாகிவிடும்.

ரணில் சுட்டிக்காட்டியபடி ஏதோ ஒரு பக்கத்தில் - ஏதோ ஒரு முடிவில் - தென்னிலங்கை ஒன்றுபடவேண்டும். தமிழரின் நியாயமான அபிலாஷைகளைத் தீர்க்கும் ஒரு திட்டத்துக்கு ஒன்றுபட்டு இணங்கவேண்டும். தவறினால் வாய்ப்பைக் கோட்டை விட்டுவிட்டு வருந்த வேண்டி நேரும்.

# 'வாளேந்திய சிங்கம்' மீது தார் பூச்சு!

கரவெட்டி,செப்.30

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை பெயர்பலகை மீது நேற்று அதிகாலை இனந்தெரியாதவர்கள் தார் பூசினார்கள்.

வட பிராந்திய போக்குவரத்துச் சபை நேற்றுமுன்தினம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குள் உள்ளீர்க்கப்பட்டது. இதனையடுத்து ஏற்கனவே இருந்த பெயர்ப் பலகைகள் மாற்றப்பட்டன.

புதிய பெயர்பலகையில் இலங்கைப் போக்குவரத்துச் சபை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன் 'வாளேந்திய சிங்கம்' சின்னம் பொறிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் பருத்தித்துறைச் சாலையிலும் புதிய பெயர் பலகையை சாலை முகாமையாளர் த.லோகநாதன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இனந்தெரியாதவர்கள் சிலர் தடிகள், கொட்டன்கள் போன்றவற்றுடன் வந்தனர். அவர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தரை மிரட்டி விரட்டினர். பின்னர் பெயர்ப் பலகையில் இருந்த 'வாளேந்திய சிங்கம்' சின்னம் மீது தார், கழிவொயில் போன்றவற்றைப் பூசி மறைத்தனர். அத்துடன், அந்தப் பெயர்ப்பலகையை சேதப்படுத்திவிட்டுச் சென்றனர்.

இத்தகவலை பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் த.லோகநாதன் தெரிவித்தார்.

இதுபற்றிப் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் என்றும் அவர் கூறினார். (ஒ-70)


சேதமாக்கப்பட்ட பருத்தித்துறை சாலைப் பெயர்ப்பலகை. *(படம்:சி.சுந்தரலிங்கம்)*

# வாய்ப் புற்றுநோய்க்கான பரிசோதனை தென்மராட்சியில் இருதினங்கள் நடக்கும்

தென்மராட்சி,செப்.30

தென்மராட்சி பிரதேசத்தில் ஐம்பது வயதுக்கு மேற்பட்டோருக்கு வாய்ப் புற்று நோய்க்கான இலவச பரிசோதனை நாளையும் நாளை மறுதினமும் நடத்தப் படவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் ப்ணிமனையினர் இந் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளனர்.

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பகல் 12.30 மணி வரை உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம் ஆகியவற்றிலும் -

பகல் 1.30 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணிவரை மிருசுவில் மத்திய மருந்தகம், நாவற்குளி கிராம சபை கட்டடம் ஆகியவற்றிலும் -

காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - கச்சாய் ஆரம்ப சுகாதார நிலையம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும் - இப்பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி., கைதடி குருசாமி வித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் ஆகியவற்றிலும் -

காலை 8.30 மணி தொடக்கம் பகல் 12.30 மணி வரை மட்டுவில் ஆரம்ப சுகாதார நிலையம், கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் ஆகியவற்றிலும் -

பிற்பகல் 1.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், கொடிகாமம் பிரதேச சபை மாநாட்டு மண்டபம், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் ஆகியவற்றிலும் பரிசோதனை முகாம் நடத்தப்படும்.

இதனை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-117)

# மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம் யாழ். பண்ணைப் பகுதியில் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

உலக வங்கியின் நிதியுதவியுடன் நீர்ப் திட்டத்தின் கீழ் யாழ். பண்ணையில் சுகாதாரத் திட்டக் கிராமத்தில் அமைக்கப்பட்ட மார்பு நோய்ச் சிகிச்சை நிலையமும், பிராந்திய மருந்துக் களஞ்சியமும் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இத்திறப்பு விழா வைபவம் யாழ். பிராந்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் உலக வங்கியின் சிரேஷ்ட செயற்றிட்ட அலுவலர் கலாநிதி என்.துரைசாமி பிரதம விருந்தினராகவும், வடக்கு - கிழக்கு மாகாணபிரதிப் பிரதம செயலாளர் (நிதி) க.மகாலிங்கம், வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரச் சேவைப் பணிப்பாளர் டாக்டர் எஸ். குமாரவேற்பிள்ளை, யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் கௌரவவிருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

மருந்துக் களஞ்சியத்தை கலாநிதி என்.துரைசாமி நாடாவைவெட்டித் திறந்துவைத்தார். மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தின் விழா கல்வெட்டை அரச அதிபர் கே.கணேஷ் திறந்துவைத்தார். கிசிச்சை நிலையத்தினை வடக்கு - கிழக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (ஒ-13-51)

# லயன்ஸ் ஆளுநர் யாழ். விஜயம்

தென்மராட்சி,செப்.30

சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் சரத் குணசேகரா நாளை யாழ்.மாவட்டத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அவர் மூன்று தினங்கள் இங்கு தங்கவுள்ளார். லயன்ஸ் கழகங்களால் மேற்கொள்ளப்படும் நலத் திட்டங்களை அவர் அப்போது பார்வையிடுவார். (ஒ-117)

## நாளை

புரட்டாதி 15
சனிக்கிழமை
01.10.2005
திதி: திரையோதசி
பின்னிரவு 01.34 வரை
நட்சத்திரம்: பூரம்
பின்னிரவு 02.55 வரை
சுபநேரம்: 03.02 - 04.32
ராகுகாலம்: 09.02 - 10.32
(யாவும் பழைய நேரப்படி)

# திருநெல்வேலி சந்தைச் சூழலில் சுகாதாரச் சீர்கேடு அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

திருநெல்வேலிச் சந்தையும் அதன் சுற்றுப்புறமும் சுகாதாரச் சீர்கேடாகக் காணப்படுவதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

சந்தை மற்றும் கடைகளிலிருந்து கொட்டப்படும் கழிவுப் பொருள்கள் உரிய நேரத்தில், அகற்றப்படுவதில்லை என்றும் -

இதனால், கழிவுகள் தேங்கி சுற்றுச் சூழலை மாசடையச் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், வடிகால்களில் கொட்டப்படும் கழிவுப் பொருள்களால் அடைபடுவதால் கழிவுநீர் தேங்குகிறது. நுளம்புப் பெருக்கம் உட்பட பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

சந்தையைச் சூழவுள்ள வாய்க்கால்களின் கட்டுகள் பராமரிக்கப்படாமையால் அவை இடிந்து தூர்ந்து போயுள்ளன. இதனால், மழைக்காலங்களில் வெள்ள நீர் சந்தை மற்றும் அயல் வீடுகளுக்குள் செல்ல நேரிடுகின்றது.

இவ்வாறு சந்தையும் அதன் சுற்றுச் சூழலும் சீர்கெட்டிருப்பதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்து திருநெல்வேலி மேற்குக் கிராம அபிவிருத்திச் சங்கம், நல்லூர்ப் பிரதேச சபைச் செயலாளரிடம் முறைப்பாடுசெய்துள்ளது.

# சமாதான நீதிவானுக்கு அறிவுறுத்தல்

தென்மராட்சி,செப் 30

சிங்கள மொழியில் வழங்கப்பட்ட வாக்குமூலத்தினை தமிழ்மொழியில் மொழி பெயர்த்து அதனை சத்திய மொழி பெயர்ப்பு என உறுதிப்படுத்திய சமாதான நீதிவான் ஒருவர் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

யாழ். மாவட்ட நீதி நிர்வாக வலயத்திற்கு உட்பட்ட சமாதான நீதிவான்கள் ஏனைய நீதி நிர்வாக வலயங்களான பருத்தித்துறை, சாவகச்சேரி, தீவகம், மல்லாகம் ஆகிய பகுதிகளில் நிறைவேற்றப்படும் சத்தியக் கடதாசிகளை உறுதிப்படுத்தக் கூடாது என நீதிவான் அப்போது அறிவுறுத்தல் வழங்கினார்.

இதனையடுத்து குறித்த சமாதான நீதிவான் தனது தவறை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோரியதையடுத்து விடுவிக்கப்பட்டார். (ஒ- 117)

## உதவாக்கு

ஒருவர் கூறும் பதில்களிலிருந்து அவரது புத்திசாலித்தனத்தை காண முடியாது. எழுகின்ற கேள்விகளிலேயே அவரது புத்திசாலித்தனம் பேணப்படும். — *காமராஜர்.*

# வீரமானிடர் விருது

வரணி,செப்.30

கொடிகாமம், பாலாவி வடக்கைச் சேர்ந்த துரைசிங்கம் குமாரநாதன் என்பவருக்கு 'வீர குடிமகன்' விருது வழங்கப்பட்டது. மீசாலை வெள்ளை மாவடிப்பிள்ளையார் கோவில் குளத்தில் வீழ்ந்த பந்தை எடுக்கச்சென்று நீரில் மூழ்கிய குமாரவேல்ராசா விபுலன் என்ற சிறுவனைக் காப்பாற்றியதற்காகவே இவ்விருது வழங்கப்பட்டது. யாழ்.பல்கலைக் கழக மாணவராகிய குமாரநாதன் இவ் விருதை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற வைபவத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதர் நிருபமாராவிடமிருந்து பெற்றுக் கொண்டார். (ஒ-170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு மாகாணப் பொதுச்சேவையில் காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிக்களப் போதனாசிரியர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2005

வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச்சேவையில் காணி நிர்வாகத்திணைக்களத்தில் வெற்றிடமாக்வுள்ள வெளிக்களப் போதனாசிரியர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்தபோட்டிப் பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆண்/பெண் ஆகிய இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2005.10.18 ஆகும்.

02. சேவை நிபந்தனைகள்:

i. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவி நிரந்தரமானது. பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின் கீழ் தங்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் பெற உரிமை உண்டு. ஏற்கனவே ஓய்வூதியத்திற் குரித்துடைய பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் தெரிவுசெய்யும் பட்சத்தில் அவர் ஒய்வூதியப் பிரமாண குறிப்பின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை இருப்பதோடு, விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு தொடர்ந்து பங்களிப்புத் தொகையினை செலுத்தவேண்டும்.

ii. இது ஓர் இடமாற்று சேவையாகும். இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல்வேண்டும். அத்துடன் நியமனம் வழங்கப்படும் நிலையத்தில் கட்டாயமாக 05வருடங்கள் சேவையாற்ற வேண்டும்.

03. சம்பள அளவுத்திட்டம்:-

பொது நிர்வாக சுற்றறிக்கை 9/2004இற்கு அமைவாக
ரூபா 101,880 - 14 x 1,320 - 6 x 1,560 - 129,720/- (TB - 2-1)

04. தகைமைகள்:

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல்வேண்டும்.

ஆ. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45வயதிற்கு மேறபடாதவராகவும் இருத்தல்வேண்டும். (ஏற்கனவே அரசசேவையில்/ மாகாண அரசசேவையில் இருப்பவர்களுக்கு உச்சவயதெல்லை ஏற்புடையதல்ல)

ஈ. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ் விண்ணப்பமுடிவு திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளிலாயினும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

*குறிப்பு:-*

வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்தபோதிலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். எனினும் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமெனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணபபித்திருத்தல் கூடாது. அவ்வாறெனில் அதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும், இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும், நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல்வேண்டும்.

<u>உ. கல்வித் தகைமைகள்:</u>

க.பொ.த (சா/த) பரீட்சையில் விவசாயம்/விஞ்ஞானம்/வர்த்தக பாடத்தில் திறமைச் சித்தியுடன் சிங்களம்/தமிழ்மொழி, எண்கணிதம்/கணிதம்/வர்த்தகஎண்கணிதம் அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும். ஒரே அமர்வில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

தேசிய கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் (N.C.G.E) விவசாயப் பாடத்தில் 'B' தரச் சித்தியுடன் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண்கணித பாடத்தில் 'C' தரச் சித்தி உள்ளடக்கியதாக ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே அமர்வில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த (சா/த) பரீட்சையில்/தேசிய கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் தமிழ்/சிங்களமொழி, கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருகதல் வேண்டும். ஒரே அமர்வில் ஐந்து பாடங்களில் சித்தியடைத்திருத்தல் வேண்டும். அத்துடன் இலங்கையில் ஏதாவது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய விவசாயப் பாடசாலையில் குறைந்தது ஒரு வருட பயிற்சிச சான்றிதழ் பெற்றிருகதல்வேண்டும்.

அல்லது

க.பொ.த (சா/த) பரீட்சையில்/தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் தமிழ்/சிங்களம் மொழி/கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களுடன் ஆறு பாடங்களில் சித்தியடைநகிருத்தல் வேண்டும். ஒரே அமர்வில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அத்துடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் விவசாயம்/தாவரவியல்/விலங்கியல்/பௌதிகவியல்/வர்த்தகம்/பொருளியல் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒருபாடத்துடன் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:

இவ்விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் மேற்குறிப்பிட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர் பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. ஆட்சேர்ப்பு முறை:-

அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம், அரச சுற்றுநிருபங்களுக்கு அமைவாக எழுத்துப் பரீட்சைப் பெறுபேற்றின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் (எழுத்து பரீட்சை நடத்துவது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தீர்மானிக் கப்படும்.)

06. எழுத்துப்பரீட்சை:

இப்பரீட்சை தமிழ்/சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களிலும் நடத்தப்படும். இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும். இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு

பொது உளச்சார்பு நேரம் - 1 மணித்தியாலம் 100 புள்ளிகள்

விண்ணப்பதாரர் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், கருத்துக்களினை பகுப்பாய்வு செய்யும் திறமை, முடிவுசெய்யும் ஆற்றல் என்பவற்றைப் பரீட்சிக்கும் வினாக்களைக் கொண்டதாக இருக்கும்.

பொது அறிவு நேரம் - 1 மணித்தியாலம் 100 புள்ளிகள்

விண்ணப்பதாரி வசிக்கின்ற அத்துடன் சேவைபுரிய இருக்கின்ற சூழல் உட்பட இலங்கையின் அரசியல், சமூக கலாசார மற்றும் பொருளாதார சூழ்நிலை, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்நத நிகழ்வுகள், அதேபோன்று விஞ்ஞானமுறையிலான விவசாய அபிவிருத்தி என்பன தொடர்பில் விண்ணப்பதாரரின் அறிவைப் பரீட்சிப்பதற்கான பொது வினாக்களைக் கொண்டதாக இருக்கும்.

07. பரீட்சைக் கட்டணம்:-

விண்ணப்பதாரி ஒருவர் அவர் வதியும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200/- ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்று அதனை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமான ரூபா 200/- ஐச் *செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு-கிழக்கு மாகாணம், திருகோணமலை* என்ற பெயருக்கு காசுக்கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும.

08. விண்ணப்பிக்கும் முறை:-

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைவாக 'A4' அளவிலான (21செ.மீX29செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்திசெய்த விண்ணப்பங்கள் 2005.10.18ஆம் திகதிக்கு முன்னர் *செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, இல.35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை* என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல்வேண்டும். விண்ணப்பதாரர் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையல் 'வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச்சேவையின் காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிக்களப் போதனாசிரியர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்தபோட்டிப்பரீட்சை - 2005' என்று பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

எவரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்குத் தமது அனுமதி அட்டை எழுத்துப்பரீட்சைக்கு [illegible] ஏழுநாள்களுக்கு முன்னராவது கிடைக்காவிடின், அதனைப் பற்றி உடனடியாக மேலே தரப்பட்ட முகவரிக்கு அறிவித்தல்வேண்டும்.

09. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:

| நகரம் | எண் | நகரம | எண் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1 | திருகோணமலை | 6 |
| மன்னார் | 2 | மட்டக்களப்பு | 7 |
| வவுனியா | 3 | அம்பாறை | 8 |
| கிளிநொச்சி | 4 | கல்முனை | 9 |
| முல்லைத்தீவு | 5 | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திலமைந்துள்ள பரீட்சை நிலையத்துக்கு மாற்றப்படலாம.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

வே.பொ.பாலசிங்கம்,
செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு-கிழக்கு மாகாணம். திருகோணமலை.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடக்கு-கிழக்கு மாகாணப் பொதுச் சேவையில் காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிக்களப் போதனாசிரியர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2005.**

சுட்டெண் [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: திரு.:திருமதி.:செல்வி :-
தமிழில் :
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:-
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-

03. தபால் முகவரி:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-

04. நிரந்தர முகவரி:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-

05. அடையாள அட்டை இல. [ | | | | | | | | | ]

06. பால்:- ஆண் : M பெண் : F

07. பிறந்த திகதி:

| | | |
|---|---|---|
| வருடம் : | மாதம் : | திகதி : |
| வருடங்கள் : | மாதம் : | நாள்கள் : |

2005.10.18ஆம் திகதியன்று வயது :

08. இனம் : சிங்களவர் [ ] இலங்கைத்தமிழர் [ ] இந்தியத்தமிழர் [ ]
முஸ்லிம் [ ] ஏனையவர் [ ]

09. நீங்கள் இலங்கைப் பிரஜையா?.........................

10. (i) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:

(ii) பிரதேச செயலாளர் பிரிவு :-

(iii) வதியும் கால எல்லை: தொடக்கம் வரை

(iv) வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின், தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம் :-

(v) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம்: மர்காணம்:
இடம்பெயர்ந்த ஆண்டு: மாதம்: திகதி:

11. பரீட்சைக்குத் தோற்றும் மொழி: [ ]
தமிழ் T /சிங்களம் S

12. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்:
(09ஆவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்) [ ]

13. கல்வித்தகைமைகள்:

13.1 க.பொ.த (சா/த)/தே.க.பொ. ஆண்டு: சுட்டெண்:

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் அரசமைப்பு யாப்பு வாக்கெடுப்புக்கு முன் தீவிரவாதிகள் தாக்குதல்களை முடுக்கிவிடும் அபாயம்!

## எச்சரிக்கிறார் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்

வாஷிங்டன்,செப்.30

ஈராக்கில் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் புதிய அரசியல் யாப்பின் மீதான பொதுசன வாக்கெடுப்புக்கு முன்னர் அங்கு தீவிரவாதிகள் தமது தாக்குதல்களை முடுக்கி விடக்கூடும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ டபிள்யூ புஷ் எச்சரித்துள்ளார்.

எவ்வாறான தாக்குதலையும் எதிர்கொள்ள அமெரிக்க - ஈராக்கியப் படைகள் ஆயத்தமாகவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஈராக்கில் நடைபெறும் யுத்தம் தொடர்பாக அமெரிக்காவில் மக்கள் ஆதரவு குறைந்துவருவதாலும், கருத்துக்கணிப்புக்களில் மக்கள் தொடர்ந்தும் ஆதரிக்கத் தயாராய் இல்லை என்பதும் தெரியவந்துள்ளதாலும் புஷ் நிர்வாகத்துக்கு பெரும் நெருக்குதல் ஏற்பட்டுள்ளது.

வட ஈராக்கில் தலபார் என்ற இடத்தில் இராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் நிலையத்தில் தற்கொலைக் குண்டுதாரி கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு உள்ளே புகுந்து குண்டை வெடிக்கச்செய்தார் என்று நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர்.

அல்-கெய்டா குழுவொன்று இந்தத் தாக்குதலுக்கு உரிமைகோரியுள்ளது.

தமது இயக்கத்தின் சார்பில் அந்த 'ஆசீர்வதிக்கப்பட்ட சகோதரி' தாக்குதலை நடத்தினார் என்று அவர்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் ஒக்ரோபர் 15ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுசன வாக்கெடுப்புக்கு எதிரான முன்னோடி நடவடிக்கையாக இது இருக்கலாம் என்று தொடர்ந்தும் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்றும் அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் பயணத்துக்குக்கான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்குத் தங்கள் சக்திக்குட்பட்ட எல்லாவித முயற்சிகளையும் தீவிரவாதிகள் எடுப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், எமது படைகள் அதற்குத் தயாராகவே இருக்கின்றன என்று புஷ் கூறியுள்ளார்.



ஈராக்கில் பணிபுரியும் இரு அமெரிக்க ஜெனரல்களுடன் ஆலோசனை நடத்தியதன் பின்னர் அதிபர் வெள்ளை மாளிகையின் ரோஜாத் தோட்டத்தில் வைத்து இக்கருத்தைத் தெரிவித்தார்.

ஈராக்கில் இருந்த அல்-கெய்டாவின் இரண்டாம் தலைவர் அபு-அஸாம் கொல்லப்பட்டதைச் சுட்டிக்காட்டிய அதிபர் புஷ், உயர் மட்டத் தலைவர்களை வேட்டையாடும் அமெரிக்க நிலைப்பாட்டிற்கு இது உதாரணமாக உள்ளது என்றார்.

அதிபர் உரை நிகழ்த்தியபோது அவரது உயர் இராணுவ ஜெனரல்கள் அவருடன் இருந்தார்கள்.

(ப-8)

# சன்னி தீவிரவாதி பாகிஸ்தானில் கைது

இஸ்லாமாபாத்,செப்.30

ஷியா பிரிவு முஸ்லிம்களைக் கொல்வதில் முக்கிய பங்கு வகித்த, சன்னி பிரிவு தீவிரவாதி ஆசிஃப் சோடோ என்பவரைப் பாகிஸ்தான் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

லஷ்கர் இஜாங்வி என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர் ஆசிஃப் சோடோ. இந்த அமைப்பு அல்கெய்டா அமைப்புடன் தொடர்புடையது.

ராவல்பிண்டி லாகூர் இடையே நெடுஞ்சாலையில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

உலக அரங்கில்

### அணுத்திட்டத்தை எதிர்த்ததன் எதிரொலி!

# இந்தியாவுக்கான குழாய் வழி எரிவாயு விநியோகத்தை ரத்துச் செய்கிறது ஈரான்?

இந்தியாவுக்கு, பாகிஸ்தான் வழியாக குழாய் மூலம் எரிவாயு விநியோகம் செய்யும் திட்டத்தை ரத்துச்செய்வது பற்றி ஈரான் ஆலோசித்துவருகிறது.

ஈரானில் இருந்து பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்குக் குழாய் மூலம் எரிவாயு விநியோகம் செய்யமுடிவு செய்யப்பட்டது. கடந்த ஜூன் மாதம் ஈரானுக்கும், இந்தியாவுக்கும் இடையே 2200 கோடி டொலர் திரவ எரிபொருளை விநியோகம் செய்வதற்கு ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

இந்த நிலையில் ஈரானில் அணு ஆராய்ச்சித் திட்டத்துக்குச் சர்வதேச அணுசக்திக் கழகம் எதிர்ப்புத் தெரிவித்தது. சர்வதேச அணுசக்திக் கழகம் சார்பில் நடந்த வாக்கெடுப்பில் ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களித்தது. அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளின் வற்புறுத்தலுக்கு அடிபணிந்தே இந்தியா இப்படிக் காலை வாரியதாக ஈரான் கருதுகிறது. இந்தியாவின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து ஈரான் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இந்தியாவுக்குக் குழாய் மூலம் எரிவாயு விநியோகம் செய்யும் திட்டத்தை ரத்துச்செய்வது பற்றி ஈரான் ஆலோசித்து வருகிறது. இந்தியாவுடன் எரிசக்தித் துறையில் ஒத்துழைப்புத் தொடர்பான ஒப்பந்தங்களை ரத்துச்செய்வது பற்றி ஆலோசித்து வருவதாகவும் ஈரானின் வெளியுறவுத்துறை சக்தி தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார். ஈரானை சமாதானப்படுத்தும் முயற்சியில் இந்தியா இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது. (8)



# நியூஓர்லியன்ஸ் பொலீஸ் பொறுப்பதிகாரி தனது பதவியிலிருந்து திடீர் இராஜினாமா

நியூ ஓர்லியன்ஸ்,செப்.30

அமெரிக்காவின் நியூ ஓர்லியன்ஸ் நகரின் பொலீஸ் பொறுப்பதிகாரி எடி கொம்பாஸ் தனது பதவியைத் திடீரென இராஜினாமாச்செய்தார்.

கத்தரீனா சூறாவளி தாக்கியதையடுத்து நியூ ஓர்லியன்ஸ் நகரில் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைந்து நான்கு வாரங்கள் கழிந்தபின் பொலீஸ் பொறுப்பதிகாரி தனது பதவியை இராஜினாமாச் செய்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமது இந்த முடிவுக்கு அவர் எதுவித காரணமும் கூறமறுத்துவிட்டார்.

சூறாவளித் தாக்கத்தையடுத்து பணிக்குத் திரும்பாமலிருந்த 225 பொலீஸ் உத்தியோகத்தர்களிடம் விசாரணை நடத்தப்படவிருப்பதாகப் பொலீஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

அனுமதி பெறாது பணிக்குத் திரும்பாமல் உள்ள பொலீஸ் படையின் 15 வீத மானவர்கள் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கவிருப்பதாகத் தெரியவருகின்றது. எதுவானாலும் ஒவ்வொரு அதிகாரியின் விடயமும் தனித்தனியாக ஆராயப்படும் என்றும், நியாயமான காரணங்களுக்காக எவரும் வராமல் விட்டிருந்தார்களா என்பதும் ஆராயப்படும் என்றும் பிரதிப் பொலீஸ் பொறுப்பதிகாரி வாரன் றில்லே கூறினார்.

இதேவேளை - சூறாவளி தாக்கியதை அடுத்து ஆரம்ப நிவாரண வேலைகளுக்குப் பொறுப்பாய் இருந்த அதிகாரி சில தவறுகள் நடைபெற்றிருப்பதை ஒப்புக்கொண்டிருந்தார். சூறாவளித் தாக்குதலையடுத்து சமஷ்டி அவசரகால முகாமைத்துவ முகவர் அமைப்பில் தாம் வகித்த பதவியை இழந்தவரான மைக்கல் பிறவுண் என்பவர் காங்கிரஸ் சபை விசாரணையொன்றில் சாட்சியமளிக்கும்போது, நியூ ஓர்லியன்ஸ் நகர மேயரும், லூசியான மாநில அரசின் ஆளுநரும் சூறாவளித் தாக்கத்தை சமாளிப்பதற்கான ஒருங்கிணைந்தபணிகள் நடைபெறுவதற்குத் தடையாக இருந்துள்ளார்கள் என்று கூறியிருந்தார்.

தனது முகவர் அமைப்பு விட்ட தவறுக்கு மற்றவர்களைக் குற்றஞ்சாட்ட பிரவுண் முயல்வதைக் கண்டு தாம் அதிர்ச்சியுற்றதாக காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

26 ஆண்டுகள் பணியாற்றியதன் பின் தாம் பதவியிலிருந்து விலகுவதாக பொலீஸ் பொறுப்பதிகாரி கொம்பாஸ் தெரிவித்தார்.

தலைமைப் பதவியில் இருக்கும் ஒவ்வொரு மனிதனும் தனது பதவியை கைவிட வேண்டிய காலம் எது என்பதை அறிந்திருக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார.

(ப-8)

# லெனினின் உடலை அடக்கம் செய்ய ரஷ்ய அரசு விருப்பம்

மொஸ்கோ,செப்.30

சோவியத் யூனியனை தோற்றுவித்த லெனின் 1924ஆம் ஆண்டே இறந்துவிட்டாலும் இன்னும் அவரது உடலை அடக்கம் செய்யாமல், பதப்படுத்தி பாதுகாத்துவருகிறார்கள். அங்கு பதவிக்கு வந்த பல அதிபர்கள் அவரது உடலை அடக்கம் செய்ய முயற்சி செய்தும் மக்கள் எதிர்ப்புக் காரணமாக கைவிட்டு விட்டார்கள். அவ்வாறு கைவிட்டவர்களில் இப்போதைய அதிபர் புடினும் ஒருவர்.

இப்போது லெனினின் உடலை அடக்கம் செய்யலாம் என்று அவரது அரசு நினைத்திருப்பதாக புடினின் உதவியாளர் தெரிவித்துள்ளார். எனினும் இது குறித்து மக்கள் கருத்தை அறிந்த பின்பே முடிவு செய்யப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (8)

# சீனா-இந்தியா எல்லைப் பிரச்சினை ; ஆறாவது சுற்றுப் பேச்சு நிறைவு

பீஜிங்,செப்.30

எல்லைப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான ஆறாவது சுற்றுப் பேச்சு பீஜிங்கில் கடந்த புதன் கிழமை நிறைவடைந்தது.

இந்தியத் தரப்பில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், சீனத் தரப்பில் அந்நாட்டு வெளியுறவுத்துறை துணை அமைச்சர் டாய் பிங்குவா ஆகியோர் தலைமை தாங்கினர். பேச்சுகள் சுமுகமாகவும் ஆக்கபூர்வமாகவும் ஒத்துழைக்கும் வகையிலும் நடந்தன என்று அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இரு தரப்பும் ஏற்கக்கூடிய சுமுகமான தீர்வுகாணவே பேச்சு நடந்தது.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது 2003 இல் சீனா வந்தார். அப்போதுதான் எல்லைப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள அரசியல் நிலையில் பேசவும், அதற்கெனத் தனிப் பிரதிநிதியை நியமிக்கவும் முடிவுசெய்யப்பட்டது. இரு தரப்பும் பேசியபோது நிரு [illegible] படவில்லை. (8)




# ஒஸாமாவைச் செவ்வி கண்ட நிருபருக்கு 7 ஆண்டுகள் சிறை

மட்ரிட்,செப்.30

அல்கெய்டாத் தலைவர் ஒசாமா பின்லேடனைச் செவ்வி கண்ட 'ஸ்ரார் ரி.வி' நிருபருக்கு, அல்கெய்டாவுடன் தொடர்பு இருப்பதாகக் கூறி, 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடத்தை விமானம் மூலம் அல்கெய்டாத் தீவிரவாதிகள் தாக்கி அழித்தனர். இந்தச் சம்பவம் உலகத்தையே உலுக்கியது.

இதைத் தொடர்ந்து 'ஸ்ரார் ரி.வியின் நிருபராகப் பணியாற்றிய டேசிர் அல்லுனி, ஒசாமா பின்லேடனைச் செவ்வி கண்டார்.

சிரியாவில் பிறந்த இவர் இப்போது ஸ்பெயின் நாட்டில் வசித்துவருகிறார்.

இவர் ஆப்கானிஸ்தானில் வேலை செய்த போதே அல்கெய்டாவுக்காக பணம் சேர்த்ததாகக் கூறி இவர் மீது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

அல்லுனி தன் மனுவில், நான் நிருபர் என்ற முறையில் என் வேலையை மட்டுமே செய்தேன். அல்கெய்டாவின் முகவராக செயற்படவில்லை என்று கூறினார். [illegible]ரித்த நீதிபதி இவருக்கு [illegible] சிறைத் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினார்.

இதை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாக அல்லுனியின் குடும்பத்தினர் கூறியுள்ளனர்.

அல் - ஜெசீரா தொலைக்காட்சி இந்தத் தீர்ப்பு ஏமாற்றம் அளிப்பதாகக் கூறியுள்ளது.

அல்லுனியின் உடல் நிலையைக் கருத்தில்கொண்டு அவரை பிணையில் விடுதலை செய்யவேண்டும் என்றும் அல் ஜெசீரா தொலைக்காட்சி கேட்டுக்கொண்டுள்ளது. (8)

அனைவருக்குமான
Home Cellular & Electronics
பாவனையாளர்களுக்கான கற்கைநெறி. சிறில் அன்றாட வாழ்வில் தேவைப்படும் செலுலார் தொடர்பான அனைத்து பகுதிகள், அடிப்படை மின்னியல், இலத்திரனியல் உள்ளடக்கப்படும். தகைமை அவசியமில்லை. முழுக்கட்டணம் - ரூ 300/=
FREE ரேடியோ மார்க்கோனியின் நினைவு தினத்தை முன்னிட்டு பூரண 40 வீத கழிவு வழங்கப்படுகிறது (Sep 25 - Oct 20). மேலும் ரூ 5 முத்திரை, சுயத உறையை வைத்து அனுப்புபவர்களுக்கு அனைத்து பாடநெறிக்கும் பொதுவான முதல் பாட அலகும் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். எமது தபாலமூல கற்கைகள் நகர்த்தப்படும் தனித்தன்மை, தரம் என்பன வற்றை அறிந்தபின் இணைந்து கொள்ள முடியும்.
40%
1.Dip in Electronics (Repairs) - 1500/= (750+750)
2.Dip in Cellular (Repairs) - 900/= (500+400)
3.சிறுவர்களுக்கான Electronics(Age 10-15) - 400/=
MARCONI TECHNICAL INSTITUTE
410, 2nd Floor, Galle Rd, Wellawatta. TP - 0112-361362

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை, நடன டிப்ளோமாதாரிகளின் மறியல் போராட்டம் இடைநிறுத்தம்

ஆறு நாள்களாக யாழ்.கல்வி வலயம் முன்பாக இசை, நடன டிப்ளோமா பட்டதாரிகள் நடத்திவரும் தொடர்மறியல் போராட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இடைநிறுத்தப்பட்டது.

இசை , நடன டிப்ளோமா பட்டதாரிகள் தமக்கு ஆசிரியர் நியமனம் வழங்கக் கோரி கடந்த 22ஆம் திகதி முதல் தொடர்ச்சியான மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

தமது போராட்டம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரனிடம் அவர்கள் முறையிட்டனர். இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருடன் சந்திப்பு ஒன்றினை ஏற்படுத்திக் கொடுத்தார்.

நேற்றுமுன்தினம் காலை திருகோணமலையில் வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளரைப் பட்டதாரிகள் சிலர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

இச்சந்திப்பின் போது பட்டதாரிப் பயிலுநர்களை ஆசிரியர் சேவையில் உள்வாங்கும் போது இசை, நடன டிப்ளோமா பட்டதாரிகளையும் உள்வாங்குவதாகக் கல்வியமைச்சின் செயலாளர் தம்மிடம் உறுதியளித்தார் என்றும் இசை, நடன டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மறியல் போராட்டம் நேற்றுமுன்தினம் மாலை இடைநிறுத்தப்பட்டது. (எ-7-12)

## திருத்தம்

*21-09-2005 ஆம் திகதி உதயன் பத்திரிகையின்*
*12 ஆம் பக்கத்தில் பிரசுரமான*
*இலங்கை அரசு நிவாரண புனர்வாழ்வு*
*நல்லிணக்கத்திற்கான அமைச்சு*
*வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமான*
*உலக வங்கியின் உதவியுடன்*
*செயற்படுத்தப்படும் திட்டம் வடக்கு -கிழக்கு*
*நீர்ப்பாசன விவசாயத்திட்டம் - கட்டம் II*
*கடன் இல: 3935 C.E*
*தேசிய கூறுவிலை கே..ரல் நிர்மாண வேலைகள்*
*கேள்வி அறிவித்தல்*

கேள்வி அறிவித்தலில் 3ஆம் பந்தியில் 03-10-2005 ஆம் திகதி 15 மணிவரை கேள்விப் பொதிக்கான ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனக் குறிப்பிடப்பட்டது ''22-10-2005 ஆம் திகதி 15 மணிவரை கேள்விப் பொதிக்கான ஆவணங்களின் இருபிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்'' எனத் திருத்தப்படுகின்றது.

அத்துடன் கேள்வி ஆவணங்கள் தொடர்பான விளக்கக் கூட்டம் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் 14-10-2005 ஆம் திகதி 14 மணிக்கு நடைபெறவுள்ளது.

**எந்திரி.எஸ்.பாலசிங்கம்,**
**திட்டப் பணிப்பாளர்,**
**நியாப்,**
*171, மின்சார நிலைய வீதி, திருகோணமலை.*
(சி/45351)(26-45-15)

## யாழ்.பஸ் நிலையத்தில் புதிய பெயர்ப்பலகை

யாழ்ப்பாணம்,செப்.30

வடபிராந்திய போக்குவரத்துச்சபை இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் கீழ் கொண்டுவரப்பட்டதையடுத்து யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் புதிய பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை 5மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் புதிய பெயர்ப்பலகையை யாழ்.மத்திய பஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.தருமநாயகம் சம்பிரதாயபூர்வமாகத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் செயலாற்று முகாமையாளர் க.பாலசிங்கம், உதவி செயலாற்று முகாமையாளர் கே.நரேந்திரன், யாழ்.சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-12)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

பட்டப்படிப்பு மாணவர்களுக்கு ஆங்கில இலக்கணம், வினாவிடை, SPOKEN ENGLISH சனி,ஞாயிறு 10.30 a.m. 3.30 p.m. BY விக்னேஸ்வரன் ஆச்சாரி.
(26.45.15) 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (40560)

**HND**

விசேட பிரிவுக்கான
விண்ணப்பங்கள்
கோரப்படுகின்றன.

**Higher National Diploma**

கற்கை நெறிக்கான விசேடபிரிவு 05-10-2005 அன்று ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் உங்கள் பதிவுகளிற்கு முந்திக்கொள்ளுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு:

Director
IIS CITY CAMPUS
#181, Navalar Road, Jaffna.
☎ 021 222 8060
(சி/45344)(26-15-19)

## தர்மாசிரியர் தேர்வுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.30

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் இந்து தர்மாசிரியர் தேர்வுக்கான பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் காலை 8மணி தொடக்கம் மாலை 5மணிவரை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி தேர்வுக்கு விண்ணப்பித்த சகல ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு இந்து கலாசார அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் கே.நாகராசா கேட்டுள்ளார். (எ)

### மாநகர சபை, யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல் - 2005

யாழ். நவீன சந்தைக் கட்டடங்களுக்குத் தீந்தை பூசுவதற்கு இக்ராட் நிறுவனத்தில் (தரம் 8 உம் அதற்கு மேற்பட்ட) பதிவுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

★ தீந்தை உட்பட பொருள்கள் மற்றும் தொழிலாளர்கள் கூலிக்குரிய கேள்விப்பத்திரம் தனியாகவும்
★ தீந்தை தவிர்ந்த பொருள்கள் மற்றும் தொழிலாளர்கள் கூலிக்குரிய கேள்விப்பத்திரம் தனியாகவும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
★ மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புக்கட்டணம் : 13,000.00
★ மீளளிக்க முடியாத கேள்விப்பத்திரக் கட்டணம் (வற் உட்பட) : 575.00
★ கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி : 12.10.2005
★ கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி :13.10.2005 பி.ப.2.00 மணி
★ கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :13.10.2005 பி.ப.3.00 மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்டு 'ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது ஆணையாளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களைவேலைப்பகுதியில்அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சீ.வீ.கே.சிவஞானம்**
*மாநகர ஆணையாளர்,*
*மாநகர சபை, யாழ்ப்பாணம்.*
*27.09.2005*
(சி/45349)(26-45-15)

**G.A.Q**
**யாழ்ப்பாணம், பேராதனை (வெளிவாரி)**

* புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
* 1st COM இற்கான புதிய பிரிவுக்கான விரிவுரைகளும் ஆரம்பமாகிவிட்டன.
* PART I இற்கான விரிவுரைகள் ஆரம்பம்: 01.10.2005 (9 மணி)

*விவரங்களுக்கு:*

S. அருள்நங்கை - நிர்வாகி,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(40552)(32-26-45-15)

# ஓராண்டு நினைவஞ்சலி

## சின்னத்தம்பி காராளசிங்கம்
(யப்பான்)
(ரவி ரயர் வேக்ஸ்சொப் உரிமையாளர்)

**திதி: 30.09.2005**



ஆண்டொன்று சென்றதோ அப்பா
ஆறவில்லை எம் துயரம்
அன்பாக பண்பாக அரவணைத்து - எம்மை
அவனி போற்ற வாழவைத்தீர்கள்
கனிவான குணமும் கபடமற்ற பேச்சும்
எப்போ எங்கள் காதில் கேட்கும் - அப்பா
எந்நாளும் உங்கள் நினைவு எம்மனதில்
நிழலாக இல்லாமல் நிஜமாக வாருங்கள்!

தோற்றம்: 03-06-1945
மறைவு : 10-10-2004

25, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்குதமிழில் ஒலித்திடும் குரல்கள்
# உலகின் மனசாட்சியை உலுக்கட்டும்

## தமிழர் குரலாகும் பொங்குதமிழ்!

''எங்கள் நிலம் எமக்கு வேண்டும்; எங்கள் நிலமே எமக்கு வேண்டும்''

என்ற முழக்கத்துடன் 2001 இல் ஆரம்பமான பொங்கு தமிழ் இன்று ''எங்கள் சுயநிர்ணய உரிமையைச் சர்வதேசமே அங்கீகரி'' என்ற கோரிக்கையுடன் எழுத்து நிற்பதைப் பார்க்கும்போது, ஈழத்தமிழர்களின் தாயக - தேசிய - தன்னாட்சிக் கோட்பாட்டுகளின் பரிணாம வளர்ச்சியை உணரமுடிகிறது.

அணி திரண்டுள்ள தமிழ் மக்களின் மனக்கதவுகள் திறக்கப்பட்டு, அவர்கள் தம் அடிமனக் கிடக்கைகள் திரண்டு வெளிவருவதை பொங்குதமிழ் அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அரை நூற்றாண்டுக்கும் மேலாக சிங்களப் பேரினவாதத்தை நம்பி ஏமாந்தது போதும். இனியும் நம்பமுடியாது என்னும் முடிவுக்கு தமிழர் நாம் வந்துவிட்டோம் என்பதை உலகுக்கு உணர்த்தும் மனிதச் சுவராகவும், மாபெரும் குரலாகவும் பொங்குதமிழ் பரிமாணம் பெற்றுள்ளதை இனியும் சர்வதேசம் உணராமல் இருக்க முடியாது.

பூகோள வரைபடத்தில் ஒரு புதுப்புள்ளி - அது, இந்து மகா சமுத்திரத்தின் கீழ்மடியில், பாரத் தேசத்தின் தென் முனையில், தமிழ்நாட்டின் கோடிக்கரையில், இன்றோ, நாளையோ, மறுநாளோ என்று பிரசவத்துக்குத் தயாராகிக் கொண்டிருப்பதை, பொங்குதமிழ் ஒலியெழுப்பி உலகுக்குக் காட்டி நிற்கின்றது. அகிலத்தில் பிறக்கப்போகும் ஒரு புதிய நாட்டின் வருகை அங்கே வெள்ளிக்கோடாகத் தெரிகின்றது.

அந்தப் பிரசவத்தின் தாதிகளாகவும் தாரகைகளாகவும் உரமுடன் செயற்படும் உங்களுடன், உரிமை கலந்து இரத்த பாசங்களாக நாம் உணர்வுடன் தொடர்ந்து செயற்படுவோம் என எங்கள் தோள்களை உயர்த்தி நெஞ்சுகளை நிமிர்த்தி உறுதியுடன் கூறுகின்றோம்.

**எஸ்.திருச்செல்வம்,**
*செயலாளர்,*
*ஈழத்தமிழர் தகவல் நிலையம் -கனடா.*

## எங்கள் நிலத்தில் எங்கள் வாழ்வு!

2001ஆம் ஆண்டு முதன் முதலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வு மூலம் தமிழரின் பிரச்சினைகள் உலகிற்கு உணர்த்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வுகள், எழுச்சி பிரகடனங்களின் மூலம் எமது உரிமை மேலும் வலியுறுத்தப்பட்டது.

கடந்த பல தசாப்தங்களாக எமது தாயகப் பிரதேசம் பெருமளவிற்கு எமது கையிலிருந்து படிப்படியாகப் பறித்தெடுக்கப்பட்டு வருகின்றது. சமாதானத்துக்கான ஒப்பந்த காலத்தில் கூட உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் விழுங்கப்பட்ட நிலப்பரப்புகளில் எங்கள் மக்கள் மீளக் குடியேற முடியவில்லை.

இந்த நிலையில்தான், ''எங்கள் நிலம் எங்களுக்குச் சொந்தமானது'', ''எங்களது நிலத்தில் எங்கள் சுய நிர்ணயத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்'' என்பதனை வலியுறுத்தி பொங்குதமிழ் 2005 நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் மக்கள் அனைவரும் உணர்வு பூர்வமாகக் கலந்து கொள்வது வரலாற்றுக் கடமையாகும்.

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
*சிரேஷ்ட புவியியல் பேராசிரியர்,*
*முன்னாள் துணைவேந்தர்.*

## தாயகக் கனவுகள் வாழ்வினில் சுமந்திட...

**நண்பர்களே உங்கள் உணர்வுகள்**
**எங்கும் பேசட்டும்**
**நண்பர்களே உங்கள் கரங்கள்**
**பலமாக இணையட்டும்**
**தமிழ் உணர்வுகள் பரவி**
**உலகெங்கும் ஒலிக்கட்டும்**
**எம் விருப்பம் எங்கும் ஒலிக்கட்டும்.**

**உணர்வெங்கும் உண்மை**
**உறவோடிணைந்து**
**உள்ளமெங்கும் தொடர்ந்து**
**பேசட்டும் - தமிழ்**
**உணர்வெங்கும் உண்மை பேசட்டும்**
**பொங்குதமிழ் எங்கும் பொங்கட்டும்**
**உலக அரங்கெங்கும் பேசட்டும்.**

**துயரங்கள் சுமைகள் ஓய்ந்திட வேண்டும்**
**புதையுண்ட எமக்கு புதுயுகம் வேண்டும்**
**உணர்வுள்ள மனிதங்கள் தேசங்கள் எங்கும்**
**அலைபாயட்டும் அலைபாயட்டும்**
**தாயகக் கனவுகள் வாழ்வினில் சுமந்திட**
**தரணியில் உழைத்திடுவோம்**
**எங்கள் தமிழினம் எங்கள் தமிழினம்**
**என்று நாம் கூவிடுவோம்.**

**- தர்மினி பத்மநாதன்.**




## எங்கள் மண்ணில் எமது அரசின் கீழ்

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் சர்வதேச மட்டத்திற்கு வளர்ச்சியடைந்துள்ள இன்றைய நிலையில் 'இவர்கள் பிரச்சினை எதுவெனத் தெரியாது' என சர்வதேசம் கூறமுடியாது. இந்தச் சூழ்நிலையில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு தமிழர் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அங்கீகரித்தல் என்பதாகவே அமைகின்றது.

தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு விடயத்தில் மட்டுமல்ல தமிழீழ தேசியத்தை ஏற்றுக்கொள்வதிலும் கடமைப்பாடு உள்ளவர்களாக சர்வதேச சமூகம் இருக்கவேண்டும். இதன்போது 1933 இல் கையொப்பமிட்டு 1934 இல் இருந்து நடைமுறைப்படுத்த ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ''அரசுகளின் உரிமைகளும் கடமைகளும் தொடர்பான மொன்ரெவிடியோ உடன்படிக்கை'' தொடர்பாகக் கவனம் செலுத்துவது இன்றைய நிலையில் பொருத்தமானதாகும். அதன்படி ஓர் அரசை சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்வதற்கு நிலையான சனத்தொகை, நிலையான தேச எல்லை, அரசு ஏனைய அரசுகளுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்கான திறன் என்ற அம்சங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் ஈழத் தமிழர்களிடம் உள்ளன.

தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினை வழங்குவதற்கு சிறிலங்கா அரசு தயாரில்லை என்பது மாத்திரமல்ல, அவ்வாறான ஒரு முயற்சியில் வெற்றியடைவதற்கான திறமையில்லாத அமைப்பாக சிறிலங்கா அரசு காணப்படுகின்றமை தற்போது வெளிச்சமாகவுள்ளது. சிங்கள, பௌத்த பேரினவாத சக்திகளின் கடும் எதிர்ப்புக்ளுக்கு மத்தியில் கைச்சாத்தாகிய சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பு கடைசியில் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கு எதிரான சில சரத்துக்களை உள்ளடக்கியதாக்க் கூறி நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளமை இதற்கு சிறந்ததொரு உதாரணமாகும்.

மீண்டும் மீண்டும் சிங்கள பேரினவாதத்தால் ஒற்றையாட்சி என்பது வலியுறுத்தப்படுவது தமிழ் மக்களுக்கு இலங்கை அரசுத் தரப்பு மீது மேலும் மேலும் சந்தேகங்களை ஏற்படுத்தக் கூடியதாகவே உள்ளது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பான கோரிக்கையை மிகவும் வலுவான முறையில் ஆணித்தரமாக வலியுறுத்த வேண்டிய சூழலில் நாங்கள் தற்போது உள்ளோம்.

காலம் காலமாக ஏமாற்றப்பட்ட தமிழினம் தலைநிமிர்ந்து ஏமாற்றுபவர்களைப் பார்த்து 'ஏன் ஏமாற்றுகிறீர்கள்?' என்று கேட்கும் உரிமையை இழக்கலாகாது என்பதற்காகப் பொங்கு தமிழில் ஒன்றிணைவோம். இம் மக்கள் போராட்டத்தின் ஊடாக 'உலகே எங்கள் பக்கம் திருப்பிப் பார்.' பெயருக்குத்தான் இலங்கைப் பிரஜை. ஆனால், இலங்கையில் எப்பகுதியிலும் எங்களை அன்னியர்களாகக் கருதி பொலீஸ் பதிவுகளும் சோதனைச் சாவடிகளில் பதிவுகளும் பொருளாதாரத் தடைகளும் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாக சிறிலங்காவில் தமிழ் மக்களின் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகிவிட்டது. எப்படிப் பார்த்தாலும் சிறுபான்மை என்பதால் இரண்டாந்தரப் பிரஜையாக்கப்பட்ட நாங்கள் எங்கள் வளங்களைப் பயன்படுத்தி எங்களுக்கான நிர்வாக அலகொன்றினை ஏற்படுத்தி வாழ வழி செய்ய சர்வதேசம் உதவவேண்டும் என்று வலியுறுத்துவோம் - எனத் தெரிவிக்கப்பட்டது.

**- யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.**

## உயிர் ஆயுதமே பொங்கு!

*அணுவைப் பிளக்கும் துணிவில் பொங்கு!*
*ஆயுதம் தூக்கும் நிறைவில் பொங்கு!*
*கனவை மறக்கும் பணிவில் பொங்கு!*
*களத்தில் ஆடும் உணர்வில் பொங்கு!*

*மக்களின் வெள்ளத்தில் தமிழே பொங்கு!*
*மாவீரர் உள்ளத்தில் தமிழே பொங்கு!*
*தமிழனின் தமிழீழத்தில் தமிழே பொங்கு!*
*தங்களின் தாகத்தில் தமிழே பொங்கு!*

*சூரிய தேவனின் கதிர்களாய் பொங்கு!*
*சுதந்திர பூமியின் மனங்களில் பொங்கு!*
*இருளைக் கலைக்கும் வீரத்தில் பொங்கு!*
*இழந்ததை மீட்கும் வெற்றியில் பொங்கு!*

*யாழ்ப்பாண மக்களின் முழுமையில் பொங்கு!*
*யாவரையும் அழைக்கும் கடமையில் பொங்கு!*
*பாட்டன் பூட்டன் பூமியில் பொங்கு!*
*பகையை முடிக்கும் ஆயுதமாகிப் பொங்கு!.*

**- நல்லை அமிழ்தன்**

## பொங்குதமிழில் ஒன்றிணைவோம்!

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் உறவு என்பது என்றுமே பிரிக்கப்படமுடியாத, அறுக்கப்படமுடியாத உறவாகும். இடையில் பெரும் தேசிய வாதிகள் திட்டமிட்டு தமிழ் - முஸ்லிம் உறவுகளைப் பிரிக்க முற்பட்டனர். இக்கால கட்டங்களில் இரண்டு பக்கங்களிலும் எண்ணிலடங்கா இழப்புகள். திசைகள் மாறின;பாதைகளும் மாறின. ஒரே குறியாக இருந்த தமிழ் பேசும் மக்களின் அரசியல் பாதைகள் பிரிந்தன. பிரித்துப் பார்க்க நினைத்தவர்கள் பெருமிதமடைந்தனர். இதனால் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு கிடைத்தது எதுவுமில்லை. இன்று ஏற்பட்டுள்ள தென்னிலங்கை அரசியலின் நிலையை அவதானித்துப் பார்க்கும்போது மீண்டும் 1957 இற்கு பெருந்தேசிய இனவாதிகள் செல்வதனைப் பார்க்க முடிகிறது. எத்தனை எத்தனை சம்பவங்கள் நிகழ்ந்தபோதிலும் இன்னும் படிப்பினை பெற, தெளிவுபெற, நியாயங்களை விளங்கிக் கொள்ள மறுக்கின்றனர்.

இந்நிலையில் வடக்கு - கிழக்கு எங்கும் பரவிக்கிடக்கும் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஓரணியில் ஒன்று சேர வேண்டும். தமிழர்களின் பிரச்சினை தீராமல் முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படப் போவதில்லை என்ற யதார்த்தத்தை தமிழ் - முஸ்லிம் மக்கள் உணரவேண்டும். இது மறுக்கமுடியாத ஒன்றாகும். இவ்விரு இனத்தவர்களும் மொழியில் ஒன்றுபட்டவர்கள். வாழும் பிரதேசங்களால் ஒன்றையொன்று தழுவி நிற்பவர்கள். எனவே நாம் ஒன்றுபடவேண்டும். ஒரே குரலாக ஒவ்வொருவரினதும் உரிமைகளையும் அபிலாசைகளையும் புரிந்து, தெரிந்து எமது போராட்டம் முன்னெடுக்கப்படவேண்டும். பெரும் தேசியவாதம் ஒடுக்கப்படவேண்டும். அடக்கப்பட வேண்டும். எமது தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணயம் பெற்ற நல்லாட்சி நடக்க வேண்டும். அதற்கு பொங்குதமிழ் நிகழ்ச்சி உரம் சேர்க்கட்டும்.

**மௌலவி பீ.ஏ.எஸ்.சுபியான்**
*தலைவர், மக்கள் பணிமனை.*

## சிந்திக்க வேண்டிய நேரம் இது

வவுனியா தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பிரகடனத்தின் மூலம் சர்வதேச சமூகத்தின் செவிகளுக்கு விடுக்கப்பட்ட செய்திக்கு மீண்டும் வலுச்சேர்க்கும் வகையில் இன்று யாழ்.பல்கலைக்கழக மருத்துபீட மைதானத்தில் நடைபெறவுள்ள பொங்குதமிழ்-2005 நிகழ்வில் ஒட்டுமொத்தமாக தமிழ்ச் சமூகமும் ஒன்று திரள வேண்டும். இதனை தமிழ் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கூட தரமறுக்கும் சிங்கள பேரினவாதத்தின் கடும் போக்கைச் சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்துவதோடு, தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையையும், தன்னாட்சி அதிகாரத்தோடு வாழும் உரிமையையும் அங்கீகரிக்கக் கோருவோம். அதற்கான எமது போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்று தமிழ் மக்களாகிய நாம் ஒரே குரலில் இன்று வெளிப்படுத்த வேண்டும்.

உலக உருண்டையில் தமிழர்களுக்கென ஒரு தனியான தேசம் என்ற வரலாற்றுப் பாதையில் ஒரு திருப்புமுனை ஏனெனில் வரலாறு படைக்கக் காலம் ஒரு முறை மட்டுமே சந்தர்ப்பம் வழங்கும். அதற்குரிய தருணம் இதுவே. ஆண்ட தமிழ் இனம் மீண்டும் தன்னைத்தானே ஆள காலம் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. எனவே, தமிழ் மக்கள் அனைவரும் சிந்தித்துச் செயற்படுவதன் மூலம் எதிர்கால சந்ததியினர் தமக்கென ஒரு சொந்த நாட்டில் சமாதானமாக வாழ வழிசமைப்போம்.

*யாழ்.பல்கலைக்கழக மாணவர் சார்பில்*
**காந்தன்**
*விவசாயபீடம்.*

## விடுதலைத் தெய்வங்களே ஆசி தாருங்கள்...!

பொங்குதமிழ்! பொங்குதமிழ்!! பொங்குதமிழ்!!!
என்பதே எங்கும் பேச்சு...
எங்கள் தமிழின் தேச விடியலே
என்றென்றும் எங்களின் மூச்சு...

பேரினவாத நோய்களின் முகத்திரை
நார் நாராய் கிழிகின்ற வேளை...
போரிலே மீண்டும் பாடங்கள் படிக்க
சிங்களம் முயல்கின்ற காலை...

யாருக்கும் தீங்கிலா எம் விடுதலை வேட்கையை
ஊருக்கு - உலகுக்கு உரத்துச் சொல்லும்
பொங்குதமிழ் பேரெழுச்சி அழைப்பு - இது
எங்கள் ஆத்ம வல்லமையின் துடிப்பு...

வீரம் விளைந்த உயிர் தியாகம் நிறைந்த -
எங்கள்

விடுதலை தெய்வங்களே...
தாயக விடியலின் திகதி குறித்திட
திரண்டெழுந்தோம், ஆசி தாருங்களே!

- சண்முகபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸை விமர்சிக்க ஜே.வி.பிக்கு அருகதை இல்லை

## இப்படிக் கூறுகிறார் ஹக்கீம்

கொழும்பு செப்.30

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பாக விமர்சனம் செய்வதற்கு எந்த அருகதையும் ஜே.வி.பியினருக்கு இல்லை என அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீ ல.மு. காங்கிரஸ் தொடர்பாக விமர்சனம் செய்வதற்கு ஜே.வி.பியினருக்கு எந்த அருகதையும் இல்லை என்றாலும் அவர்கள் அரசியல் அநாகரிகத் தன்மையுடன் விமர்சனம் செய்ததை அசட்டையாக விடவும் முடியாது. ஜே.வி.பியினரின் கலாசாரமே தனிப் பாணி.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீல.மு.காங்கிரஸ் யாரை ஆதரிப்பது என்பதைத் தீர்மானிக்க வேண்டியுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் காங்கிரஸை கீழ்த்தரமாக ஜே.வி.பியினர் விமர்சிப்பதால் நாம் தீர்மானம் எடுக்கும் விடயத்தில் அது சாதக. பாதகமான நிலையை ஏற்படுத்தலாம் என ரவூப் ஹக்கீம் பதில் அளித்தார்.

நாம் யாரை ஆதரிப்பது என்பதை இன்னும் தீர்மானிக்கவில்லை. இரு வேட்பாளர்களிடமுமே எங்களுடைய கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளோம். ஆளுமை மற்றும் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக் கூடிய நம்பகத்தன்மை உள்ள ஒருவரையே நாம் ஆதரிப்போம்.

இது தொடர்பாக நுவா தலைவி அமைச்சர் பேரியல் அஷ்ரப்புடன் பேச்சு நடத்தி வருகின்றோம் - எனக் கூறினார் ரவூப் ஹக்கீம்.

முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும் என்பதே எங்களுடைய எண்ணமும் இணைந்து பேசக்கூடிய தகுதியும். நம்பிக்கையும் உள்ள அமைப்புகளுடன் பேசி இணைவதில் தவறில்லை. இப்பொழுது ஜனாதிபதித் தேர்தலைத் தீர்மானிக்கும் சக்தியாக சிறுபான்மையினரின் வாக்குகளே அமைந்துள்ளன. இதனைத் தடுக்க சில தீயசக்திகள் முயற்சிக்கின்றன. சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களும், பிரமுகர்களும் கொலை செய்யப்படலாம். இதன் மூலம் சிறுபான்மை இனத்தவர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி அவர்களை வாக்களிக்க விடாமல் தடுக்கும் ஒரு சதித் திட்டமும் தீட்டப்படுவதாகவும் நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன.

முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி சிறுபான்மையினரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டும்.

பொலீஸாரின் இடமாற்றம் பொலீஸ் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதும் அதிகார துஷ்பிரயோகத்தின் மூலம் பொலீஸார் இடம்மாற்றப்படுகின்றனர். இதனை ஜனாதிபதி தடுக்கவேண்டும்.

அரச, தனியார் ஊடகங்கள் தொடர்பான சர்ச்சை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. அனைத்து ஊடகங்களும் சமநிலையில் செயற்பட வழி வகுக்கவேண்டும்.

நேர்மையானதும், சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கான பாதுகாப்பு உத்தரவாதம் அவசியம் எனத் தாம் வலியுறுத்தினார் என்றார் ரவூப் ஹக்கீம்.

(க)

### மணற்காட்டில் இருந்து சாவகச்சேரிக்கு குடிதண்ணீர்

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப்பகுதியிலிருந்து குடிதண்ணீர் பெறப்படவுள்ளது.

சாவகச்சேரி நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குடிதண்ணீர் வழங்கும் திட்ட வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சிரேஷ்ட ஆலோசகர் எஸ். சிவதாசன் தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற சாவகச்சேரி நகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் இத்தகவலை அவர் தெரிவித்தார்.

(ஒ-31- 117)

# பணமின்றித் திண்டாடுகிறாராம் பிரதமர்

கொழும்பு.செப்.30

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ளவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரசாரச் செலவுகளுக்குப் பணம் இன்றித் திணறுகிறார் என்று "இருதின" சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்பிருந்தே பெருமெடுப்பில் செலவுசெய்து பிரசாரத்தை மேற்கொண்டவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அவர் தற்போது பிரசார செலவுக்குப் பணமின்றித் திண்டாடுகிறார் என்று தெரியவந்துள்ளது.

தான் ஜனாதிபதியானால் திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கைவிட்டு 1970-1977 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கடைப்பிடிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையை முன்னெடுப்பார் என்று பிரதமர் ஜே.வி.பியினருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் சம்மதம் தெரிவித்திருந்தார்.

பிரதமருக்கு நிதியுதவி வழங்கும் வர்த்தகச் சமூகத்தினரை இந்த விடயம் பாதிக்கும். ஆகவே அவர்கள் இந்த ஒப்பந்த இணக்கம் குறித்து அதிருப்தி அடைந்துள்ளனர். அதனால், பிரதமருக்கு நிதியுதவி உள்ளிட்ட ஒத்துழைப்புகளை வழங்குவதிலிருந்து அவர்கள் விலகியுள்ளனர்.

பிரதமருக்கு பணப் பற்றாக்குறை ஏற்பட இதுவே காரணமெனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, பிரதமரது தேர்தல் பிரசாரத்துக்கென வர்த்தகச் சமூகம் ஏற்கனவே கணிசமான பணத்தை வழங்கியிருந்தது அதில் ஒரு தொகைப் பணம் அமெரிக்க ஐக்கிய வங்கியின் கலிபோர்னியாக் கிளையில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக வர்த்தகச் சமூகத்தின் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. பிரதமருக்கு வழங்கிவந்த ஒத்துழைப்பை வர்த்தகச் சமூகம் கைவிட இதுவும் ஒரு காரணம் எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சிறு மற்றும் மத்தியதர வர்த்தகர்களை அணுகி அவர்களது உதவியின் மூலம் தமது தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ள பிரதமர் பிரயத்தனம் செய்கிறார் என்று தெரியவந்துள்ளது. இவ்வாறு செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஒ-206)

## நவநாள் ஆராதனைகள்

கொழும்புத்துறை, செப்.30

கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் தினமும் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நற்கருணை ஆராதனையும் திருப்பலி யும் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிறு காலை 7 மணிக்குத் திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெறும். முடிவில் செபமாலை அன்னையின் ஆசீருடன் விழா நிறைவுபெறும்.

◆◆◆◆◆

யாழ்ப்பாணம், றக்கா வீதியில் அமைந்துள்ள புனித் திரேசாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 23 ஆம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நவநாள் வழி பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் இடம் பெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் திருநாள் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் சொரூப ஆசீரும் இடம்பெறும்.

## நாவற்குழி தத்தெடுப்பு

நாவற்குழி வீடமைப்புத் திட்டப்பகுதியைத் தத்தெடுப்புக் கிராமமாக சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கடந்த வாரம் பொறுப்பேற்றுள்ளனர்.

இக்கிராமத்தில் ஆரம்பக் கல்வி, சுகாதாரம் போன்ற பணிகளை அவர்கள் மேற்கொள்ளவுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சான்றோர் சனசமூக நிலைய விளையாட்டு மைதானம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. லயன்ஸ் கழக உறுப்பினர்களுடன் பொதுமக்களும் இந்தச் சிரமதானத்தில் கலந்துகொண்டனர்.

அன்றைய தினம் சனசமூக நிலையக் கட்டடத்தில் மருத்துவ ஆலோசனைகள் லயன்ஸ் கழக மருத்துவர்களால் வழங்கப்பட்டன. வீடமைப்புத் திட்டத்தில் உள்ள 300வீடுகளின் உரிமையாளர்களுக்கும் தலா இரண்டு மரக்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டன.

சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் சரத்குணசேகர எதிர்வரும் மூன்றாம் திகதி இக்கிராமத்தைப் பார்வையிடுவார் என்று லயன்ஸ் கழகத்தலைவர் லயன் தி.சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (ஒ-117)


ஈரவிழிகளுடன் இதயம் கனக்க...

முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் செல்லையா பஞ்சாட்சரம்

(தர்மகர்த்தா - கருக்குவாச்சி விநாயகர் ஆலயம், பெரியமாவடி)

உருவாய் மண்ணில்
24-03-1944

அருவாய் விண்ணில்
11-09-2004

இதயங்கள் வென்று நின்ற இ யம்தான் சரிந்ததுவோ?
ஓராண்டு நிறைந்தும் இதயச் சுமை குறையுமோ?
நிதமும் நாம் வாழவென்று நிமிர்ந்து பணி செய்தவர்
நிறைந்த மலர்ப் புன்னகையில் நெஞ்சங்களைக் கவர்ந்தவர்
உதயநில வாகியெங்கள் உள்ளங்களில் நின்றவர்
ஊர்புகழ நாங்கள் வாழ உணர்வு கொண்டு உழைத்தவர்
பதம் பணிந்து எங்கள் தந்தை பேரை நாங்கள் வெல்லுவோம்
பரமபாதம் அவர் அமர நாளும் மலர் தூவுவோம்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பெரிய மாவடி,
சாவகச்சேரி.

- குடும்பத்தவர் -

(40504)(50)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள அரசின் கோர முகத்தாலும் சர்வதேசத்தின உதாசீனத்தாலும் மனம் வெம்பி நிற்கின்றார்கள் ஈழத்தமிழர்கள். பொறுத்துப் பொறுத்து பொங்கியெழுந்துவிட்டார்கள்.

இதற்கெனத் தமது பிரதேசங்கள் தோறும் எழுச்சி நிகழ்வுகளை நடத்தி தமது உணர்வுகளைச் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

அவற்றின் உச்சமாக இன்று யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் தமிழர்கள் அணிதிரண்டு தம் உணர்வலைகளை வெளிப்படுத்தவுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பொங்குதமிழ் குறித்தும் அதில் அணி திரளவேண்டியதன் அவசியம் குறித்தும் பலரும் கூறிய கருத்துக்களில் இருந்து சிலவற்றை இங்கு தருகின்றோம்.

# ஏன்? எதற்காக? பொங்கு தமிழுக்கு போகவேணும்?

## "பொங்குதமிழில் சிறுபங்கேற்க லண்டனிலிருந்து வந்தேன்..."

அ. இரவி
*லண்டன் 'ஒரு பேப்பர்' என்னும் சஞ்சிகையின் ஆசிரியர்.*



லண்டனில் இரண்டு வகையான தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். ஒருசாரார் உழைப்பை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவர்கள். இவர்கள் உதவி கேட்டால் செய்வார்கள். இன்னொரு சாரார் எமது தாய் மண்ணின் மீது மிகுந்த பாசம் கொண்டவர்கள்.

எங்களுக்குப் பொங்குதமிழ் என்ற சொல்லே மந்திரம். பொங்குதமிழ் பானையைத் தமிழீழப் பானை என்றும் தமிழீழத்துக்கான குறியீடுதான் இப்பானை என்றுமே கருதுகின்றார்கள். அங்கும் பொங்குதமிழ் நடத்துகின்றோம். ஏன், ஐரோப்பா முழுவதுமே பொங்குதமிழ் நடத்தப்படுகின்றது. இங்கு நடைபெறும் பொங்குதமிழ் நிகழ்வை ரீ.வி. மூலம் நேரடியாகப் பார்ப்போம். நிறையப் பேருக்குப் பொங்குதமிழ் தொடர்பான உணர்ச்சிப் பிரவாகம் உள்ளது.

இதற்கு முதல் நான் இங்கு வந்த போது வவுனியா பொங்குதமிழைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதில் பங்குகொண்ட உணர்வே என்னை இந்தப் பொங்குதமிழுக்கு அழைத்தது.

நான் யாழ்ப்பாணம் வந்ததற்கு 90 வீதமான நோக்கம் இந்தப் பொங்குதமிழில் செயலாற்ற வேண்டும் என்பதே. இப்பொழுது நான் பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவுடன் இணைந்து என்னால் முடிந்த சிறு பணிகளைச் செய்கின்றேன்.

பொங்குதமிழ், மக்கள் மத்தியிலுள்ள தேவைகளை இனங்கண்டு வெளிப்படுத்துவது. வெளிச் சமூகம் புலிகள் மட்டும் போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள் என்றே கருதுகின்றது. பொங்குதமிழுக்கு மக்களைப் புலிகள் வலிந்து அழைக்கின்றார்கள் என்றுதான் சொல்லுது. இதைப் பொய்யெண்டு இந்தப் பொங்குதமிழ் நிருபிக்கும்.

நாடாளுமன்றத்துக்கு 22 உறுப்பினர்களை எமது மக்கள் தெரிந்து அனுப்பியுள்ளார்கள். இது சாதாரணமாகத் தெரிவு செய்யப்பட்டதல்ல. மக்களின் உணர்ச்சியின் வெளிப்பாடே அவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பியது. அதேபோல் மக்களின் உணர்வுகளை உலகுக்கு அறிவிப்பதாக இந்தப் பொங்குதமிழ் அமையும் என்று நான் பூரணமாக நம்புகின்றேன்.

## "எங்கட பிள்ளையளுக்காக நாங்களும் போகவே வேனும்..."

திருமதி கோவிந்தராஜா
*(மூதாட்டி)*



கம்பசில பொங்குதமிழ் எண்ட ஒரு நிகழ்வு நடக்கப்போதாம். இதப் பற்றி என்ர பிள்ளையளும் வீட்டில நெடுகலும் கதைக்கிறவை. றோட்டாலயும் இதைப்பற்றி அறிவிக்கிறாங்கள். அதுகளக் கேட்கும்போது நானும் போகவேணும் என முடிவெடுத்தன்.

எங்கட பிள்ளையளின் பிள்ளைகள் எதிர்காலத்தில் இப்படியான 'பொங்குதமிழ்' நடத்தக் கூடாதென்றால் நான் மட்டுமல்ல எல்லோருமே ஒன்று சேர வேண்டும். அதுகளாவது நல்லா இருக்கவேணும்.

போனமுறை பொங்குதமிழுக்கு ஆமிக்காரன் நிறைய றோட்டில நிண்டான். அதால போகமுடியாது. இந்தமுறை ஏலாட்டியும் நானும் என்ர பிள்ளையளும் கட்டாயமாகப் பொங்குதமிழுக்குப் போய் எங்கட எழுச்சியை மக்களோட சேர்ந்து வெளிப்படுத்துவம்.

## "மக்கள் புரட்சி வெடிக்கின்றது தமிழீழம் நிச்சயம்"

ப. குனேந்திரன்
*தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர்*



நாங்கள் எல்லோரும் சேர்ந்து வைக்கப்போகிற பொதுவான ஒரு கோரிக்கை எமது மக்கள் விடுதலையாய் வாழ்வதற்குச் சிங்கள அரசு போட்டு வைத்திருக்கின்ற தடைக்கல்லை உடைத்து எமது விடுதலைக்காக நாங்கள் எடுத்திருக்கின்ற - எடுக்கப் போகின்ற - முயற்சிகளை அங்கீகரிக்கும்படியும் இல்லையேல் நாங்கள் பிரிந்து சென்று எமக்குரிய உரிமையை நாம் பெறுவதற்குச் சுதந்திரமாக வாழ்வதற்கான விடுதலைப் போராட்டத்தை நடத்துவதற்கு இடையூறாக இருக்க வேண்டாம் என்பதுவே.

இதை வலியுறுத்தி 'பொங்குதமிழ்' ஊடாக நாம் சர்வதேசத்தின் நீதிக்கண்ணைத் திறக்கவுள்ளோம்.

மாவீரர்களின் கனவுகள் இப்போது நனவாகிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக தியாகதீபம் திலீபன் அண்ணா உண்ணாவிரதம் இருக்கின்றபோது, மக்கள் புரட்சி எப்போது வெடிக்கிறதோ அப்போது சுதந்திர தமிழீழம் மலரும் என்றும் மக்கள் புரட்சியால் மலரப் போகும் தமிழீழத்தை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்றும் கூறியிருந்தார்.

இன்றைய காலத்தில் மக்கள் எழுச்சிகொண்டுவிட்டார்கள். அவர்களின் எழுச்சியின் இறுதிவடிவமும் சர்வதேசத்திற்கு விடப்படும் இறுதிச் சந்தர்ப்பமும்தான் இந்தப் பொங்குதமிழ்.

இந்நிகழ்வின் ஊடாக நாங்கள் வைக்கின்ற கோரிக்கைகளைச் சர்வதேசம் அங்கீகரித்தால் அவர்களின் ஆதரவோடு எமக்குரிய விடுதலையைப் பெறுவோம். இல்லையேல் எமது பலத்தால் எமது தலைவிதியை நாங்களே தீர்மானிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

## "தேசியத் தலைமையின் கீழான அணி திரள்வே இது..."

சூ. சொலமன் சிறில்
*யாழ்.மாவட்ட ப.நோ.கூ.ச.தலைவர், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர்*



எமது பலத்தில் எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கின்ற சூழல் உருவாகும்-சுதந்திரமான இலட்சிய வாழ்வை நோக்கி ஈழத் தமிழர்கள் உன்னதமான தேசியத் தலைமையின்கீழ் அணி திரண்டுவிட்டார்கள், புரட்சி கொண்டுவிட்டார்கள் என்பதை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தும் ஓர் உன்னத நிகழ்வாகவே பொங்குதமிழை நான் கருதுகின்றேன்.

நாம் ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா அரசிடம் வைத்த கோரிக்கைகளை அது ஏற்கவில்லை. தொடர்ந்தும் அரசிடம் கோரிக்கைகளை வைத்து தமிழ் மக்கள் எல்லோரும் களைத்துவிட்டார்கள். எனவே, இனி ஸ்ரீலங்கா அரசிடம் கோரிக்கை விடுப்பதைவிட்டு சர்வதேச சமூகத்திடம் கோரிக்கைகளைப் பொங்கு தமிழ் நிகழ்வின் ஊடாக வைக்கவுள்ளோம். இந்தக் கோரிக்கைகளும் நிராகரிக்கப்படுமானால் யாரிடமும் இனிக் கோரிக்கைகளை முன்வைக்க நாம் தயாரில்லை.

தற்போதும் சர்வதேச நாடுகள் சில விடுதலைப் புலிகள் மீது நல்ல அபிப்பிராயத்தைக்கொண்டுள்ளன. ஆனாலும், 'பொங்குதமிழ்' ஊடாக மக்களின் எழுச்சிக்குரல் சர்வதேசத்தின் கண்களைத் திறக்கும் என நம்புகின்றோம்.

எமது இந்தக் கோரிக்கைகளை சர்வதேசம் உதாசீனம் செய்யுமானால் ஒரே தலைமையின் கீழ் அணிதிரண்டு எமக்குரிய தீர்வை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## "புலிகள்தான் வலிந்து அழைத்தனரா? இந்தப் பொய்ப்பிரசாரத்துக்கு ஆப்பு!"

க. றூபன்
*யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட இரண்டாம் வருட மாணவன்*



'பொங்குதமிழ்' நடத்துவதற்கு நிறையக் காரணங்கள் உள்ளன. தமிழருக்கென்று நிறைய ஆசைகள உள்ளன. தமிழீழம் வேண்டும், அதில் நாங்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்ற ஆசைகள் உள்ளன. அந்த ஆசைகளை 'ஊர் ஊராக' என்ற நிகழ்வு மூலம் ஊர் ஊராகச் சென்று கேட்கின்றோம். அந்த ஆசைகளின் பிரதிபலிப்பாக இந்தப் பொங்குதமிழ் பிரவகிக்கும்.

போர் மூலமே எமக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்குமென்றால் இந்தப் 'பொங்குதமிழ்' போருக்கான அறிகுறியாகவே இருக்கும். தமிழ் மக்களுக்காகத் தமிழ் மக்களால் நடத்தப்படுகின்ற இந்தப் பொங்குதமிழில் தமிழ்மக்கள் அனைவருமே ஒன்றிணைந்து குரலெழுப்ப உள்ளார்கள்.

நாங்கள் பொங்குதமிழ் பிரசாரத்திற்குச் சென்றபோது மக்கள் அனைவருமே கூறியது 'இனிமேலும் எங்களால் இழக்க முடியாது. அனைவருமே இணைந்து போராடத் தயார்' என்பதுதான்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றன. அவையனைத்தினதும் ஒருமித்த குரலாய் - இறுதியான வெளிப்பாடாய் இந்தப் பொங்குதமிழ் அமையும்.

போன 'பொங்குதமிழ்' பற்றி சந்திரிகா அரசு பொய்ப் பிரசாரம் செய்தது. புலிகள்தான் பயமுறுத்தி மக்களை ஒன்று சேர்த்து இப்பொங்குதமிழை நடத்தினார்கள் என்று.

இன்றைய பொங்குதமிழ் இந்தப் பொய்ப்பிரசாரத்தை உடைத்தெறியும். தமிழர்கள் தமது உரிமைக்காய் குரல் கொடுக்கும் களம் இது என்று சர்வதேசம் புரிந்துகொள்ளும்.

## "தமிழரின் ஆசைகள் பொங்குது...!"

திருமதி சிவரதி ராஜ்குமார்
*பெண்கள் பண்பாட்டு மையம்*



தமிழ் மக்களின் மனங்களில் உள்ள ஆசைகள், உணர்வுகளை உலக்குக்கு வெளிப்படுத்துவது, அவர்களின் மனங்கள் பொங்குவதன் குறியீடே இந்தப் பொங்கல் பானை.

எங்கள் வீட்டுக்குப் போக வேணும். எங்கள் நிலங்களில் நாங்கள் சுயமாக வாழவேண்டும் என்பதே எமது தமிழ் மக்களின் அபிலாஷை. இந்த ஆசைகளை ஓரிடத்தில் கூடி ஒரே குரலாய் ஓங்கி ஒலிக்கச் செய்வதற்கே இந்தப் பொங்குதமிழ் நடத்தப்படுகின்றது.

தமிழினம் தன்னுடைய சுயத்தைக் கட்டியெழுப்பி, தன் மண்ணில் என்று சுதந்திரமாக வாழ்கின்றதோ அன்று வரை பொங்கும்; எமது பொங்குதமிழ் பொங்கும்.

தமிழினம் அடிமைப்பட்டுள்ளது. அதிலும் பெண்கள் இன்னும் அதிகமாக அடிமைப்பட்டுள்ளனர். பொங்குதமிழில் பங்குகொள்ளும் ஒவ்வொரு பெண்களினதும் வெளிப்பாடு மற்றப் பெண்களிடமும் வெளிப்படும். இது நிச்சயம் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும்.

மௌனப்பண்பாட்டைக் களைந்தெறிந்து பேசும் பெண்களாக ஒவ்வொரு பெண்களும் வரவேண்டும். பெண்கள் பேசுவது சமூகத்திற்கும் பரவவேண்டும். பெண்களின் குரல் பிரச்சினைகள் தீரும்வரை ஓங்கி ஒலிக்க வேண்டும்; ஓங்கி ஒலிக்கும்.

கடந்த பொங்குதமிழில் ஒலித்த மக்களின் குரலும், புலிகளின் இராணுவ பலமும் சிங்கள அரசைப் பேச்சு மேசைக்குக் கொண்டு வந்தன. ஆனாலும், பேரினவாத அரசும் சிங்களப்படையும் தமிழரை இன்னும் அடிமைப்படுத்தி வைத்திருக்கவே நினைக்கின்றன.

இது ஆழிப்பேரலையின் பின்னரான மீள் கட்டுமானத்தில் தமிழர் ஓரம் கட்டப்பட்டதிலிருந்து தெரிகின்றது.

இனியும் நாங்கள் அரசை நம்பப் போவதில்லை. தமிழரின் விடிவுக்காக உடல், உயிர் அனைத்தையும் தியாகம் செய்தனர் போராளிகள். தமிழரின் நல்வாழ்வுக்காய் நடைமுறை அரசைத் திட்டமிட்டு வழிநடத்தி வருகின்றார் எமது தலைவர். எங்கட அரசை அங்ககரிக்குமாறு கோரியே தமிழராகிய நாம் ஒன்று சேர்ந்து இப்பொங்கு தமிழை நடத்துகின்றோம்.

## "நெடுகலும் துன்பப்பட முடியாது"

யோகநாதன் அரவிந்தன்
*நல்லூர், அரசடிச் சந்தி ஓட்டோத் தரிப்பிடப் பொறுப்பாளர்.*



சிங்கள தேசம் எங்களுக்கு உரிமையைத்தர ஒருக்காலும் முன்வராது. நாங்கள் நெடுகலும் துன்பப்படவும் இயலாது. நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எங்கட உணர்வுகளைச் சர்வதேசத்துக்குத் தெரியப்படுத்தும் ஒரு நிகழ்வாகவே பொங்குதமிழ் அமையும். பொங்குதமிழுக்கு நாங்கள் யாழ்.மாவட்ட முச்சக்கர வண்டிச் சங்கத்தினூடாகப் போக்குவரத்து உதவிகளைச் செய்யவுள்ளோம்.

இந்த நிகழ்வு தமிழ் மக்களுக்கு ஏதாவது ஒரு வழியில் செல்வாக்கை ஏற்படுத்தித் தரும்; தரவேண்டும்.

நாம் நெடுகலும் அடிமைகளாக வாழமுடியாது. எமது குரலை நிச்சயம் சர்வதேசம் ஏற்று அங்கீகரிக்க வேண்டும். அதுவே எமது விருப்பம்.

## "போராட்டத்தின் காப்பரண்!"

எல். சிவானந்தராஜா
*யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி 2ஆம் வருட மாணவன்*



பொங்குதமிழ் எமது மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரும் ஒரு களமே. அந்த இடத்தில நின்று கொண்டு தமிழ் மக்களெல்லாம் ஒன்று சேர்ந்து தமது பிரச்சினைகளைச் சர்வதேசத்திற்குத் தெரியப்படுத்தவுள்ளோம்.

நான் பொங்குதமிழ் பிரசாரத்துக்குச் சென்ற நேரம் உரும் பிராயில அம்மா ஒருவர் உணர்ச்சி பொங்கக் கூறினார். "தம்பியள் நீங்க சொல்லித்தான் நாங்கள் வரவேண்டுமா? எங்களுக்காக நாங்கள் குரல்கொடுக்கிற கட்டத்தில் நாங்கள் வராமல் முடியுமா?" என்று.

இராணுவத்தின் பாதுகாப்பு வலயத்தாலும் முகாம் வாழ்க்கையாலும் எங்களுடைய பிரதேசமே எமக்கு மறக்கடிக்கப்பட்டு விட்டது. சமாதானப் பேச்சுக்கள் என்று நாங்கள் எண்ணியதெல்லாம் வெறும்கனவுகளை மட்டுமே எங்களுக்குள்ள வளர்த்தது.

இந்தச் சிங்கள அரசு எங்களுக்குத் தமிழீழ அரசைத் தூக்கித் தராது. சர்வதேசம் நினைக்குது விடுதலைப் புலி என்ற போராட்டக்குழு மட்டுமே தமிழீழத்தை வேண்டுது என்று. அதுவல்ல, தமிழ்மக்களின் ஒட்டுமொத்தக்குரலே பொங்குதமிழாகப் பிரவாகிக்கின்றது என்பதை நாங்கள் சர்வதேசத்திற்கு உணர்த்தவேண்டும். அதற்கு இந்தப் பொங்குதமிழே சரியான வழி.

போராட்டம் தனிக்குழுவால் மட்டுமல்ல. தமிழ் இனத்தால் முன்னெடுக்கப்படுகின்ற ஓர் ஆயுதம். அதற்கு முன் காப்பரணாக இந்தப் பொங்குதமிழ் அமைகின்றதென்று சொல்லலாம்.

**கருத்துக்களைத் திரட்டியோர்: சுதாகரன், கங்கா, தீபா**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்

க.பொ.த.[உ/த] 2005 பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற மாணவச் செல்வங்களை

## பாராட்டி வாழ்த்துகிறோம்

| | |
|---|---|
| 1. செல்வி இ.சிந்துஜா | 3 A (மாவட்ட நிலை 14) |
| 2. செல்வி த.பிரியங்கா | 3 A (மாவட்ட நிலை 24) |
| 3. செல்வி வி.தயாளினி | 2 A, B |
| 4. செல்வி ம.ஜெயந்தினி | 2 A, B |
| 5. செல்வி ஆ.வானதி | 2 A, B |
| 6. செல்வன் ச.விஜயராகவன் | 2 A, B |
| 7. செல்வன் நா.ஹரேந்திரன் | 2 A, C |
| 8. செல்வி வி.கமலச்செல்வி | 2 A, C |
| 9. செல்வி இ.கேதாரணி | A, 2B |
| 10. செல்வன் க.ஏதீஸ்வரன் | A, 2B |
| 11. செல்வி த.உஷா | A,B,C |
| 12. செல்வி த.சர்மிலா | A,B,C |
| 13. செல்வன் ம.செல்வகாந்தி | A,B,C |
| 14. செல்வி து.மதுரா | A,B,C |
| 15. செல்வன் கு.ஸ்ரீசங்கர் | A,B,C |
| 16. செல்வன் இ.ரஜீவன் | A,2C |
| 17. செல்வி பொ.சோபாசினி | A,2C |
| 18. செல்வி இ.கல்பனா | A,2C |
| 19. செல்வன் கு.தர்சன் | A,2C |
| 10. செல்வன் நா.விக்கினேஸ்வரன் | 3B |

அதிபர், ஆசிரியர்கள்,
அலுவலக உத்தியோகத்தர்,
மாணவர்கள், தர்மகர்த்தா சபை,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி-45342) (26-21-19-45)

## ஜனாதிபதி - பிரதமர் மந்திராலோசனை

ஐக்கிய நாடுகள் சபை பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு நாடு திரும்பிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொழும்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பல சிரேஷ்ட அமைச்சர்களுடன் முக்கிய பேச்சுகள் நடத்தியிருக்கிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நாடு திரும்பிய ஜனாதிபதி அன்றிரவே பிரதமர் மஹிந்தவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். முக்கியமான பல விடயங்கள் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டன எனவும் ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் விஞ்ஞாபனம், தேர்தலுக்கான பிரசாரச் செயற்பாடுகள் என்பன உட்படப் பல்வேறு விடயங்கள் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டன எனவும் இவை தொடர்பில் தாம் கொண்டுள்ள நிலைப்பாட்டை ஜனாதிபதி திட்டவட்டமாக இந்தச் சந்திப்பில் கூறிவிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன உட்படப் பல முக்கிய சிரேஷ்ட அமைச்சர்களை நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்த ஜானதிபதி அவர்களுடனும் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து விரிவாகக் கலந்துரையாடினார் என அறியவந்தது. (எ-க)

## வரிவிலக்கு வாகனம்பெற எம்.பிக்கள் பிரயத்தனம்

35லட்சம் ரூபா வரையான தீர்வை விலக்குடன் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவரும் இந்த வாகன அனுமதிப் பத்திரத்தின் மூலம் சொகுசு வாகனங்களை வரித்தீர்வையுடன் அவர்கள் இறக்குமதி செய்யலாம்.

வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஏராளமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்கான சேவை அலுவலகத்தில் திரண்டிருந்தனர்.

நாடாளுமன்றம் எந்நேரமும் கலைக்கப்படலாமென செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் இந்தச்சலுகையைப்பெற எம்.பிக்கள் முண்டியடிப்பது குறிப்பிடத்தக்கது. (க-3)

## சடலத்தைப் பொறுப்பேற்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.30

சந்நிதி கோயிலை முகவரியாகக் கொண்ட கார்த்திகேசு இராஜேந்திரம் என்பவருடைய சடலம் எவரும் உரிமை கோரப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ளது என்றும்- அச்சடலத்தை உறவினர்கள் வந்து உடன் பொறுப்பேற்குமாறு - யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ)


16ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 15 07 1927 — மறைவு 14 09 2005



திருமதி சிவக்கொழுந்து பூரணம்

அன்னை உன்னைக் காணத் தவிக்கின்றோம்
தவிக்க விட்டு எங்கு சென்றாய்
தரணிதனில் உன் குரலைக் கேட்க முடியவில்லை
நாட்கள் பல சென்றாலும் நம்பமுடியவில்லை
நாங்கள் படும்பாட்டினை கேட்கமாட்டாயா
உன் புகழ் என்றும் ஏழேழு உலகமும் கேட்கட்டும்
உனது ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

ஆசாரியார் வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [illegible] குடும்பத்தினர்

முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 15 - 10 - 1922



உதிர்வு 11 - 10 - 2004

திருமதி புவனேஸ்வரி அருளம்பலம்
(தாவடி பெரியக்கா)
திதி: திரயோதசி 30-09-2005

தாவடியூர் தனில் அம்பலவாணர்
பிள்ளையாய் வந்துதித்தீர்
நீர்வேலி தனில் அருளம்பலத்தினை
கணவனாய் கரம்பிடித்தீர்
புன்னாலைக்கட்டுவனில் குடும்பத்துடன்
வாழ்ந்திட்டீர்
தன்னுயிர் போல் 11 பிள்ளைகளை
நற்பிள்ளைகளாய் வளர்த்தெடுத்தீர்
அன்பாலும் பண்பாலும் எங்களை
சீராட்டி வளர்த்து
பாசமழை பொழிந்து எங்களை
நன்மக்களாக்கி
நானிலம் போற்ற நற்பண்புகளுடன்
வாழவைத்த
எங்கள் அன்புத் தெய்வமே
அம்மா!
எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி
இறைவன் பாதக்கமலங்கட்கு
சென்றீரோ அம்மா!
உங்கள் நினைவு நிலைத்திடவே
வையத்துள் நாம் வாழ்வோம்.

இன்று (30-09-2005) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் நாளை (01-10-2005) சனிக்கிழமை மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேய ஆலயத்தில் இடம்பெறும் அபிஷேகம், மகேஸ்வர பூசையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

45, கலட்டி அம்மன் வீதி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
222 5229

கணவர் - ஆ.அருளம்பலம்,
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

(40550) (24-)

ஓம் ஸ்ரீ [illegible]





யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2005

மஹோற்சவ விவரங்கள்

புரட்டாதி 16 ஆம் நாள் (02-10-2005) ஆதிவாரம் - மாலை 4மணிக்கு கர்மாரம்பம், அனுக்ஞை, சாந்தி வழிபாடு
புரட்டாதி 17 ஆம் நாள் (03-10-2005) சோமவாரம் - முற்பகல் 10.15 மணி கொடியேற்றம் (துவஜாரோகணம்) சூரிய பிரபைச் சேவை, மாலை மஹாயாகாரம்பம் அன்னச்சேவை
புரட்டாதி 18 ஆம் நாள் (04-10-2005) மங்கள வாரம் - காலை கேடகம் (நவராத்திரி விரதாரம்பம்) மாலை சேஷ சயனச்சேவை
புரட்டாதி 19 ஆம் நாள் (05-10-2005) புதவாரம் - காலை கேடகம், மாலை கருடசேவை
புரட்டாதி 20 ஆம் நாள் (06-10-2005) குருவாரம் - காலை கேடகம், மாலை அனுமச்சேவை
புரட்டாதி 21 ஆம் நாள் (07-10-2005) சுக்கிரவாரம் - காலை கேடகம், மாலை பூந்தண்டிகைச்சேவை
புரட்டாதி 22 ஆம் நாள் (08-10-2005) சனிவாரம் - காலை கருடசேவை, மாலை கஜேந்திரசேவை
புரட்டாதி 23 ஆம் நாள் (09-10-2005) ஆதிவாரம் - காலை கேடகம், மாலை சப்பரம் (வெண்ணெய் தாழிச்சேவை)
புரட்டாதி 24 ஆம் நாள் (10-10-2005) சோமவாரம் - காலை கருடசேவை, மாலை அஸ்வசேவை
புரட்டாதி 25 ஆம் நாள் (11-10-2005) மங்களவாரம் - காலை 8 மணி வசந்தமண்டபப் பூஜை முற்பகல் 10 மணி இரதோற்சவம் நண்பகல் 12 மணி இரதவரோகணம் நண்பகல் 12.30 மணி மஹா ஆசீர்வாதம், மாலை கருடசேவை
புரட்டாதி 26 ஆம் நாள் (12-10-2005) புதவாரம் - காலை 7.30 மணி வசந்தமண்டபப் பூஜை, காலை 9 மணி சந்திரபுஷ்கரணியில் தீர்த்தோற்சவம், திருவோண தீபபூஜை, மஹாயாக கும்பாபிஷேகம், விஜயதசமி மானம்பூ உற்சவம் மாலை துவஜாவரோகணம், சந்திர பிறைச்சேவை.
புரட்டாதி 27 ஆம் நாள் (13-10-2005) குருவாரம் - காலை காசி யாத்திரை நிச்சயதார்த்தம், மாலை திருக்கல்யாணம், பூந்தண்டிச்சேவை
புரட்டாதி 28 ஆம் நாள் (14-10-2005) சுக்கிரவாரம் - மாலை திருவூஞ்சல், பூந்தொட்டிச்சேவை
புரட்டாதி 29 ஆம் நாள் (15-10-2005) சனிவாரம் - காலை கருடசேவை, மாலை கருடசேவை
புரட்டாதி 30 ஆம் நாள் (16-10-2005) ஆதிவாரம் - மாலை வதிரி விருஷயோகநாராயண உற்சவம்
புரட்டாதி 31 ஆம் நாள் (17-10-2005) சோமவாரம் - காலை மஹாலக்ஷ்மி அபிஷேகம் மாலை சுமங்கலிதத் தீபபூஜை, உற்சவம்
ஐப்பசி 01 ஆம் நாள் (18-10-2005) மங்களவாரம் - காலை பிராயச்சித்த அபிஷேகம், வாகன பூஜை, மாலை ஸ்ரீ ஆஞ்சநேயர் அபிஷேகம், பொங்கல், உற்சவம்.

| முற்பகல் | பிற்பகல் |
|---|---|
| காலை சந்தி பூஜை: 9 மணி | சாயரட்சை பூஜை: 3.30 மணி |
| ஸ்தம்ப பூஜை: 9.30 மணி | இரண்டாம் காலப்பூஜை: 3.45 மணி |
| வசந்தமண்டபப் பூஜை:10.15 மணி | ஸ்தம்ப பூஜை: 4.30 மணி |
| | வசந்தமண்டபப் பூஜை: 5.15 மணி |

(பழைய நேரப்படி நடைபெறும்)

ஆதீன மஹாசபை,
யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள்
தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்சிலைமடுவில் பொது மண்டபம் திறப்பு

ஒட்டுசுட்டான்,செப்.30

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் கற்சிலைமடுவில் பொதுநோக்கு மண்டபம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கற்சிலைமடுவில் உள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இந்த மண்டபம் கடந்த மாதம் 13ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினத்தின் ஊடகப் பேச்சாளர் சி.வேதவனம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை மாவட்ட உதவி அரச அதிபர் செல்வி ஆரணியும் தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தனும் ஏற்றிவைத்தனர்.

பொது மண்டபத்தின் பெயர்ப்பலகையை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ரூபாஜினி கந்தையா திரைநீக்கம் செய்துவைத்தார். வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நாடாவை வெட்டி மண்டபத்தைத் திறந்துவைத்தார். (ஒ-13-341)

# கைப்பை கண்டெடுப்பு

பரந்தன்,செப்.30

பரந்தன் நகரப்பகுதியில் கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு பரந்தன் பிரதேச அரசியல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் மேற்படி பிரதேச அரசியல் துறைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்று கண்டாவளைக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ச.வின்சன் கேட்டுள்ளார்.

(ஒ-13-352)

# மனித உரிமைகள் குறித்த செயலமர்வு

ஒட்டுசுட்டான்,செப்.30

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் பற்றிய செயலமர்வு கடந்த 16 ஆம் திகதி கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வடக்கு - கிழக்குப் மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் அருட்தந்தை மா.செ. கருணாரட்ண அடிகளாரின் தலைமையில், நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழ் மக்களின் உரிமைகள், அவை மீறப்படும் சந்தர்ப்பங்களில் தீர்வைப்பெறும் பொருட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், மனிதர்களைப் பாதிக்கும் அடிப்படை மனித உரிமை மீறல்கள், சிறுவர் உரிமைகள், இவை பற்றிய சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்கள் ஆகியவை தொடர்பாக விளக்கவுரை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

இத்தகைய செயலமர்வு விசுவமடு மகா வித்தியாலயப் பகுதியிலும் நடைபெற்றது. தொடர்ந்து பல்வேறு மட்டங்களில் இக்கருத்தரங்கு நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-341-204)



முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டாவது கிளை புதுக்குடியிருப்பில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

திறப்பு விழா நிகழ்வில் மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் சி.மெ.சிவமயம் நாடாவெட்டிக் கிளைக் கட்டடத்தைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் சங்கத்தின் செயலாளர் ஸ்ராலின், தமிழீழ நிர்வாக சேவையின் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் செ.முரளி , முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படம்: புதுக்குடியிருப்பு செய்தியாளர்)*

# விலைப்பட்டியல் சீரில்லை

ஒட்டுசுட்டான்,செப்.30

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் சிலவற்றில் வைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியலில் விலை குறிப்பிடப்படாது பொருள்கள் மட்டும் பட்டியலிடப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் விலையைத் தெரிந்துகொள்ள முடியாமல் உள்ளது. இதனால், விலைப்பட்டியல்களை உரிய முறையில் பார்வைக்கு வைக்க உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-341-204)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் கண்டாவளையில் மலசலகூடம் அமைப்பு

உலக உணவுத் திட்டத்தின் கீழ் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 7 கிராமங்களில் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

உமையாள்புரம், பரந்தன், முரசுமோட்டை, பெரியகுளம், கல்மடுநகர், தருமபுரம் கிழக்கு, தருமபுரம் மேற்கு ஆகிய கிராமங்கள் இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

ஒரு கிராமத்தில் தலா 20 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை -

மேற்படி திட்டத்தின் கீழ் தருமபுரம் மகா வித்தியாலயம், பெரியபரந்தன் அ.த.க.பாடசாலை போன்றவற்றின் புனரமைப்புப் பணிகளும் - புளியம்பொக்கணை புதிய கண்ணகை அம்மன் வீதி, கட்டைக்காடு, பெரியகுளம் முதலாம் குறுக்குத்தெரு ஆகிய வீதிகளின் புனரமைப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன என கண்டாவளைப் பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் மொன்ரனி தெரிவித்தார். (ஒ-352-202)

# விதை உற்பத்தி குறித்த கலந்துரையாடல்

பரந்தன்,செப்.30

கிளிநொச்சி மாவட்டத்தில் விதை உற்பத்தியை மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கலந்துரையாடல் விதைபொருள்கள் மற்றும் நடுகைப் பொருள்கள் அலுவலகத்தில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது.

உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ.ஆனந்தராசா, கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.நாமகள், பிராந்திய விதை அத்தாட்சிப் படுத்தும் உத்தியோகத்தர் ஏ.ரமணிதரன், பரந்தன் பண்ணை முகாமையாளர் சி.சிறீதரன், உணவு விவசாய ஸ்தாபன கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஈ.எம்.பாலசுப்பிரமணியம், கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் சு.மனோகரன், கிளிநொச்சி மாவட்ட விதை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பத்மநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விதை உற்பத்தியின் நோக்கம், விதை உற்பத்தியில் நெல் மற்றும் மறுவகைப் பயிர் உற்பத்தி, மாவட்டங்களின் விதைத் தேவைக்கேற்ப விதை உற்பத்தி மேற்கொள்ளல், வரும் பெரும்போகத்தில் எவ்வாறு விதை உற்பத்தியை மேற்கொள்வது போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன. (ஒ-352-202)




# ஒட்டுசுட்டான் விவசாயிகள் கவலை

ஒட்டுசுட்டான்,செப்.30

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நெற்கொள்வனவு போதியளவு மேற்கொள்ளப்படாததால் விவசாயிகள் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

முத்தையன்கட்டுக் குள நீர்ப்பாசனத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையில் விளைந்த நெல்லைக் கூட்டுறவுச் சங்கங்கள் முழுமையாகக் கொள்வனவு செய்யவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் தாம் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஒ-341-202)

# கேணல் சங்கர் நினைவுத்தூபி திறப்பு

ஒட்டுசுட்டான்,செப்.30

தமிழீழ விடுதலைப் புலிகளின் வான்படைத் தளபதி கேணல் சங்கரின் 4ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வும் நினைவுத்தூபித் திறப்பு விழாவும் கடந்த திங்கட்கிழமை முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலையில் நடைபெற்றன.

பாடசாலை ஆசிரியர் சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் மு.இராசையா ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியைத் தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன் ஏற்றினார்.

நினைவுத் தூபியின் பெயர்க்கல்லை புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் திரைநீக்கம் செய்துவைத்தார். திருவுருவப் படத்தைக் கேணல் சங்கரின் துணைவியார் திரைநீக்கம் செய்துவைத்து ஈகச் சுடரேற்றினார்.

நிகழ்வில் கருத்துரைகளை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினத்தின் ஊடகப் பேச்சாளர் சி.வேதவனம், முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன் ஆகியோர் நிகழ்த்தினர். (ஒ-341-202)

# சமூக முன்னேற்றப் பயிற்சிநெறி

கிளிநொச்சி,செப்.30

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடனும் நிகொட் நிறுவன அனுசரணையுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சமூக மட்டக் குழுக்களை மேம்படுத்தும் பயிற்சி நெறிகளை நடத்திவருகின்றது.

'பால்நிலை சமத்துவம்' என்னும் தலைப்பில் கடந்த 20ஆம் திகதி காஞ்சிபுரம் கிராம முன்பள்ளியில் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது.

'நிகொட்' நிறுவன வருமானத் திட்டக் கணக்காளர் தலைமையில் நடைபெற்ற பயிற்சியின் வளவாளராக கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி திட்ட இணைப்பாளர் சி.இராமநாதன் கலந்துகொண்டார்.

'உளவியல்' என்னும் தலைப்பில் கடந்த 19ஆம் திகதி காஞ்சிபுரம் கிராம முன்பள்ளியில் மற்றொரு பயிற்சி இடம்பெற்றது.

இதன் வளவாளராக கிளிநொச்சி அன்னை இல்லத்தைச் சேர்ந்த பெ.கணேசமூர்த்தி கலந்துகொண்டார்.

(ஒ-202)

# ஆனந்தபுரத்தில் 'செம்மை' திட்டம்

கிளிநொச்சி,செப்.30

தமிழர் சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் குடும்பங்களின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு 'செம்மை' என்னும் திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, ஆனந்தபுரம் உதயநிலா மகளிர் சங்கத்தைச் சேர்ந்த 20 பயனாளிகளுக்கு 80 ஆயிரம் ரூபா கோழி வளர்ப்புக்கென வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் வழங்கும் நிகழ்வு கடந்த 17ஆம் திகதி நிறுவனத்தின் நடுவப் பணிமனையில் இடம்பெற்றது.

(ஒ-202)





தியாகதீபம் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் தியாகி திலீபனின் உருவப்படம் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் ஊர்வலமாக எடுத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் -

திலீபனின் திருவுருவப் படத்திற்கு கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஈகச்சுடர் ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

# விவசாயக் கிணறுகள் அமைக்கத் திட்டம்

பரந்தன்,செப்.30

சமூக சேவைத் திணைக்களம் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் மேட்டு நிலப் பயிர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் 4கிராமங்களில் விவசாயக் கிணறுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கிராமத்திற்குத் தலா ஒரு கிணறு வீதம் அமைக்கப்படவுள்ளது. ஒரு கிணற்றுக்கு 60 ஆயிரம் ரூபாவைத் திணைக்களம் வழங்கும். மிகுதியைச் கிராம மக்களின் பங்களிப்பைப் பெற்றுச் செயற்படுத்தவேண்டும் என கண்டாவளைப் பிரதேச செயலக அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் மொன்ரனி தெரிவித்தார்.

(ஒ-352-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் கற்கைகள் பட்டப்படிப்புக்கல்லூரி
D.C.S. (நியூட்டன்)
ஆரியகுளம்சந்தி அருகில், 342, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

G.A.Q., 1st in Com. 2006/2007
யாழ்., பேராதனை பல்கலைக்கழகம்
★ பல்கலைக்கழக பதிவுகள் எமது நிறுவனத்தால் செய்துதரப்படும்.
★ பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

B.A. Part I, B.A. Part II - மீட்டல்
G.A.Q., B.A. (பேராதனை) மீட்டல்

விரிவுரைகள் ஆரம்பம்:
01-10-2005 சனி காலை 8 மணி (சி/45346) (26-24-19-11)

## திருட்டு முறியடிப்பு

வீடு புகுந்து திருட முற்பட்ட கும்பல் ஒன்று வீட்டில் உள்ளவர்கள் விழித்துக் கொண்டதால் திருட்டு முயற்சியைக் கைவிட்டுத் தப்பிச்சென்றனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் யாழ். குருசோ வீதிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம் பெற்றது.
(ஒ-12-190)


# பதவி வெற்றிடங்கள்

## வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் (வ/து)

12.09.2005ஆம் திகதி விளம்பரம் செய்யப்பட்ட மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விளம்பரம் இரத்துச் செய்யப்பட்டு, மீண்டும் சில திருத்தங்களுடன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பொதுமுகாமையாளர் - 101/09
சம்பள அளவுத் திட்டம்: (31/99) 5000 - 7300 / 110x10 - 120x10

மேலதிகமாக கூ.வே. ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கு அமைவாக வழங்கப்படுகின்ற 1250/-, 2500/- ரூபாவும் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும்.

**கல்வித் தகைமை:**
அ) கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்தில் 03 வருட அனுபவம்
அல்லது
11ஆவது சம்பளத் திட்டத்தில் 06 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரியாக இருப்பதுடன், முகாமைமட்ட சேவையில் 2 வருட அனுபவம்.
அல்லது
இ) கூட்டுறவுப் பணியாளர் உயர்பிரிவில் சித்தி அல்லது க.பொ.த. (உ/த) இல் மூன்று பாடங்களில் சித்தியுடன் முகாமைசேவையில் நான்கு வருட அனுபவம்
**வயதெல்லை 18-40 வருடங்கள்**

02. கணக்குப் பதிவாளர் - 301/11
சம்பள அளவுத் திட்டம்: (31/99) 4500 - 6400 / 90x10 - 100x10

மேலதிகமாக கூ.வே.ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக வழங்கப்படுகின்ற 1250/-, 2500/- ரூபாவும் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும்.

**கல்வித் தகைமை:**
அ) கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் 12ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/இலிகிதர் பதவியில் 2 வருட அனுபவம் **அல்லது** கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் 13ஆவது சம்பளத் திட்டத்தில் இலிகிதர் பதவியில் 4 வருட அனுபவம்.
ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதியுநர் பயிற்சி **அல்லது** அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியுடன் கணக்குப் பகுதி வேலையில் 2 வருட அனுபவம்.
அல்லது
இ) கூட்டுறவுப் பணியாளர் உயர் பிரிவு கற்கை நெறியில் சித்தி **அல்லது** க.பொ.த. (உ/த) பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் கணக்கு வேலையில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்
**வயதெல்லை: 18-40 வருடங்கள்**

3. களஞ்சிய மேற்பார்வையாளர் - 207/13
சம்பள அளவுத் திட்டம்: (31/99) 4000 - 5550 / 75x10 - 80x10

மேலதிகமாக கூ.வே. ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக வழங்கப்படுகின்ற 1250/-, 2500/- ரூபாவும் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப் படும்.

**கல்வித் தகைமை:**
அ) கூட்டுறவுப் பணியாளர் 14ஆவது சம்பளத்திட்டத்தினை ஒத்த பதவியில் 2 வருட அனுபவம் **அல்லது** கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் ஒத்த பதவியில் 4 வருட அனுபவம்.
ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சா.த) பயிற்சி நெறியில் சித்தி **அல்லது** க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட நான்கு திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியுடன் மேற்பார்வை வேலைகளில் 2 வருட அனுபவம்.
**வயதெல்லை 18-40 வருடங்கள்**

**விண்ணப்பத்தில் கீழ்க்காணும் விடயங்களைச் சேர்த்துக் கொள்ளவும்.**
முழுப்பெயர் :
சொந்த முகவரி:
வயது: ஆண்டு , மாதம், திகதி:

**ஏனைய விவரங்கள்:**
★ ஏற்கனவே விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கருத்திற் கொள்ளப்படமாட்டாது. கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றுவோர் தமது சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவேண்டும்
விண்ணப்பங்கள் அனைத்தும் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு **தலைவர், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், வேலணை** என்ற முகவரிக்கு 14.10.2005ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவேண்டும்.
கடித உறையின் இடதுபக்கத்தில் தங்களால் விண்ணப்பிக்கப்படும் பதவியைக் குறிப்பிடவும்.


**தலைவர்,**
**வேலணை ப.தெ.வ.அ.கூ. சங்கம்.** (சி/45347) (21-24-11-19)



**ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள,**
**அடுத்த மாதமாவது...**



## அன்புக்குரிய இலங்கைப் பிரஜைகளே!



இலங்கை யுத்தத்தினால் மோசமாகப்
பாதிக்கப்பட்டுள்ளது.
யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது கட்சிகளால்
நடத்தப்படும் அரசாங்கத்தால் முடியாது என்பது
எம் அனைவருக்கும் தெரியும்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமெனில்,
யுத்தம் புரியும் தமிழ் கட்சிகளும் சிங்கள
கட்சிகளும் கட்சி பேதமற்ற ஞானமுள்ள
ஒரு தலைவரின் கீழ் ஒன்றிணைய வேண்டும்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்.
ஒரு திறமையுள்ள வேட்பாளர் முன் வர வேண்டும்.
அப்பொழுது தான் யுத்தம் முடிவிற்கு வரும்.
இதைத் தவிர வேறு வழி இல்லை என்பதை
நாம் எல்லோரும் அறிவோம்.

சித்தாலேப வைத்தியர்
விக்டர் ஹெட்டிகொட.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு மாகாணப் பொதுச்சேவையில் காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிக்களப் போதனாசிரியர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்தபோட்டிப் பரீட்சை - 2005

முதலாம் அமர்வு:

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

க.பொ.த. (சா/த)/தே.க.பொ. ஆண்டு: சுட்டெண்:

இரண்டாம் அமர்வு:

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

க.பொ.த (உ/த) ஆண்டு :- சுட்டெண் :-

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

13.2. (i) விவசாய கற்கை நெறியில் பெற்ற பயிற்சி சான்றிதழின் பெயர் :-

(ii) சான்றிதழை வழங்கிய நிறுவனம் :-

(iii) சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :-

14. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட ...................................................... பிரதேச செயலகத்தின் ..................ஆம் இலக்க..................ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டு பிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதற்கும் எனது இணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி: .............................. ..................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பப்பத்திரத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்தம் திரட்டிய வேதனமாக ரூபா 128,160/- இற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் .

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-
விண்ணப்பதைச் சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி ........................ என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ........................ ஆந்திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ........................ ........................

கையொப்பத்தை உறுதபபடுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப் பெயர்:-
பதவி:-
முகவரி:- (பதவி முத்திரை)

16. (வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்திற்கு இடம்பெயர்ந்துள்ளவர்கட்கு)
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு-கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக/வதிவிடமாக கொண்டவர் என்பதையும், அவர் ........................ திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து ........................ மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் இத்தற்காலிக வதிவிடத்தை ஆதாரமாக வைத்து இம் மாகாண சபையில் எப் பதவிக்கும் விண்ணப்பிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ........................ ........................

கிராம சேவையாளர் கையொப்பம்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

17. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:
இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி. ................................................ அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக்காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:........................ ........................

திணைக்களத்தலைவரின் கையொப்பமும் பெயரும்.

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

(G/45348)

## மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் காயம்!

யாழ்ப்பாணம்,செப்.30

நல்லூர், முத்திரைச்சந்திப் பகுதியில் வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில திருநெல்வேலியைச் சேர்ந்த யோகராஜா கோபிராஜ் (வயது 22), கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறையைச்சேர்ந்த ஜேசுதாஸ் பற்றிக் (வயது 26) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-12-ரி)

## சூழல்தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.30

ஒக்ரோபர் 7ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ள சூழல் பாதுகாப்புத் தினத்தையொட்டி நல்லூர் பிரதேச செயலகமும் நல்லூர் பிரதேச சபையும் இணைந்து பல நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றன. நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பை கூழங்கள் அனைத்தையும் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் -

சனசமூக நிலையங்கள்,பாடசாலைகள், பொதுநிறுவனங்கள், பிரதான வீதிகள் போன்றவற்றில் மரநடுகைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் - நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்தார்.

இதேவேளை, தண்ணீரைப் பாதுகாப்பது தொடர்பாக தேசிய நீர் வடிகால் சபையினால் பொது மக்களுக்கான கருத்தமர்வுகள், படவிளக்கங்கள் என்பன பிரதேச ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-12)

## ஆக்கத்திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.30

நல்லூர் ஆடியபாதம் வீதி முத்தமிழ் முன்பள்ளியின் ஆக்கத்திறன் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் இரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் முதன்மை விருந்தினராகவும் -

தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் சு. ஜெயராஜ், ஓய்வு பெற்ற ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணியம், சிறுவர் பாதுகாப்பு நிதிய திட்டமிடல் முகாமையாளர் அ.பேரின்பநாதன், சிறுவர் பாதுகாப்பு நிதிய திட்ட அலுவலர் செல்வி உமா சங்கரலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஓ-203)

டிஜிற்றல் போட்டோ கொப்பி
$A_4$- கறுப்பு வெள்ளை -3 ரூபா
$A_4$- கலர் 40 ரூபா

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/16, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/45195) (39-11-15-16)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

**திருமதி ச.நாகராசா**

அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் சின்னத்துரை சேதுலிங்கம்**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினமான இன்று, அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ஞானாசாரியார் கல்லூரி,
கரவெட்டி.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

(40574)(32-11-45)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**இளையதம்பி கணேசலிங்கம் (தேவா)**

(உரிமையாளர், ஜெனா மெற்றல் கிறசர்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25-07-1957 | 29-09-2001 |

ஆண்டுகள் தான் ஓடி ஓடி
மறைந்தாலும் எங்கள்
நினைவலைகள் மட்டும் ஓய்ந்து
விட மாட்டாது.
உங்கள் கனவுகளை நனவாக்கி
திடமாக வாழ்வோமப்பா.

பொற்கொல்லர் வீதி,
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

மனைவி,
பிள்ளைகள்.

(40571) (46-11-32-45)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 - 10 - 1924



இறப்பு 10 - 11 - 2004

**வைரவி பெண்ணு**

பிறப்பு 19 - 11 - 1982



இறப்பு 11 - 07 - 2004

**பரமசிவம் றஜிவன்**
(சின்னம்பி போத்தை)

ஓராண்டு சென்றாலும் நீங்கள் வாழ்ந்த
காலங்கள் எங்களால் மறக்க முடியாது.

இன்று (30-09-2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

(40573)(26-32-11-45)

குடும்பத்தினர்.

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 07 - 02 - 1973



இறப்பு 30 - 09 - 1996

**சண்முகநாதன் சிவகுமார் (வெள்ளை)**

எத்தனையோ கற்பனைகள்
எண்ணிலா நினைவலைகள்
பத்து மாதம் சுமந்தேனடா!
பெற்ற வயிறு துடிக்குதடா!
இத்தரையில் உனைப் பிரிந்து
ஒன்பது ஆண்டுகள் சென்றதடா!
நீ எங்கு சென்றாயடா சிவகுமாரா!

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

உன் பிரிவால் தவிக்கும்:
அம்மா, அத்தான், அக்கா,
மச்சான், தங்கை, மருமக்கள்.

(40572)(32-11-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

சணடெல தொலைபேசி இணைப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 077 6559047. (40555)

## காணி விற்பனைக்கு

மீசாலையில் சிற்றம்பலம் வீதியில் குடியிருக்கத்தக்க 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி V. சிவலிங்கம், செருக்கல் வீதி, டச்சுறோட், சாவகச்சேரி. (40559)

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, நாகபூசணி அம்மன் வீதியில் காளி கோயிலுக்கு அருகில் 2½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777111389. (40550)

## தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: வீனஸ்பாம், இல. 79/5A, பலாலி வீதி, (நல்லூர் A.G.A Office முன்பாக), யாழ்ப்பாணம்.T.P.077252478 (40529)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

## உதைபந்தாட்டம்

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

முற்பகல் ஆட்டங்கள்

*14 வயதுப்பிரிவு:* சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

*16 வயதுப்பிரிவு:* சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் எதிர் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

*18 வயதுப்பிரிவு :* சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

பிற்பகல் ஆட்டங்கள்

*14 வயதுப்பிரிவு:* தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயம் எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்.

*16 வயதுப்பிரிவு:* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.

*18 வயதுப்பிரிவு :* மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் அராலி இந்துக் கல்லூரி

* * *

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

*16 வயதுப்பிரிவு:* புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி எதிர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

புத்தூர் ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம் எதிர் கோப்பாய் மகா வித்தியாலயம்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

புத்தூர் புத்த கலட்டி விஷ்ணு வித்தியாலயம் எதிர் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.

புத்தூர் ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம் எதிர் உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்.

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி எதிர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

புத்தூர் புத்த கலட்டி விஷ்ணு வித்தியாலயம் எதிர் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்.

*18 வயதுப்பிரிவு:* உரும்பிராய் இந்துக் கல்லூரி எதிர் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்.

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி எதிர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

புத்தூர் புத்த கலட்டி விஷ்ணு வித்தியாலயம் எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம் எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம். (ஒ-86)

## தாச்சிச் சுற்றுப்போட்டி

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம், யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம், தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்திவரும் தாச்சிப் போட்டியில் இன்று அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகமும் கைதடி துர்க்கா விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (ஒ-86)

## 28.09.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உதயசூரியன் போன்று உன்னத நம்பிக்கை

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200636708 இலிருந்து 200655043 வரை

சீட்டிழுப்பு இல. 1645

வெற்றி எண்கள்

**16 29 44 47**

சுப்பர் எண் **16**

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.28,70,250/- வெல்லப்பட்டுள்ளது**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 28,70,250/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 26 | 5,000/- | 1,30,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 494 | 1,000/- | 4,94,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,540 | 500/- | 7,70,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,714 | 40/- | 9,48,560/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,250 | 20/- | 4,45,000/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,36,623 | 10/- | 33,66,230/- |
| | | மொத்தம் | 81,53,790/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 86,53,790/- |

**இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 37,69,100/-**

தொடர் இல. 300606316 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 01 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிள் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 200639346-1-64 |
| குருநாகல் | 200645775-7-47 |
| கம்பஹா | 200652787-9-53 |
| கொழும்பு | 200649782-3-96 |
| மட்டக்களப்பு | 200640823-2-15 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

மரணசாசன நியாயாதிக்க

வழ.இல.1252/T

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த

**இன்னாசிப்பிள்ளை பற்றிக் பெண்**

இசபெல்லாவின் மரணசாசன விடயமாக

காலஞ்சென்றவர்

**சூசைப்பிள்ளை ஜோக்கீம்** -கரவெட்டி மத்தி

\- மனுதார்

எதிர்

**ஜோக்கீம் பெண் மேரி அன்னமலர்**

\- கரவெட்டி மத்தி

\- எதிர் மனுதார்

மேலே பெயர் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதி மன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 2005 ஆம் ஆண்டு 10 மாதம் 27ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முன்னர் இம்மன்றில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2005 ஆம் ஆண்டு 09ஆம் மாதம் 28ஆம் திகதி மன்றின் கட்டளைப்படி

பதிவாளர்
S.Santhiraligam,
Registrar & J.P,
Deputy Fiscal District court,
Point Pedro.

வரைவு
எஸ்.குமாரசாமி
மனுதார் சட்டத்தரணி

(40561)(21.11.15)

## 60ஆவது பிறந்தநாள் வாழ்த்து



30.09.2005

**திரு. ஆறுமுகம் ஆனந்தராசா**

(கரணவாய் தெற்கு, கரவெட்டி)

அகவை அறுபதில் கால் பதித்த
எம் அன்புத் தந்தை இதுவரை
வாழ்ந்த ஆனந்த வாழ்வை
தொடர முருகன் அருள் புரிய
வேண்டுகிறோம்.

வாழ்த்துவோர்:

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

## யாழ் - கொழும்பு பெரிய பஸ் கட்டணம்

## குறைக்கப்பட்டுள்ளது Rs.1100/=

## திறீ ஸ்ரார் ஹோட்டல்

இல.162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 222 3817, 7125

**Save the Children**
in Sri Lanka

We are looking for a committed & energetic individual to join our team as:

**Partnership Development Officer- Emergency Preparedness**

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

The aim of the post is to work with Save the Children team and other stakeholders to ensure emergency preparedness in place at organizational and program levels.

**Base Station**
Jaffna

**Qualifications and experience**
**Essential**

- Graduate qualifications in social sciences or equivalent experience in a similar position
- About 3 years work experience in an NGO.
- Two years experience managing emergency preparedness and response projects with a policy influencing dimension
- Knowledge of geographical terrain and socio-cultural structure in Jaffna.
- Experience of planning and managing projects, including budget
- Experience of and commitment to participatory approaches
- Experience in working with impact-focused monitoring frameworks
- Understanding of the overall child rights situation in Sri Lanka - vulnerability and capacities of children in Emergencies
- Ability and willingness to travel widely in disaster prone areas and to work under pressure in difficult situation
- Ability to produce high quality analytical reports and proposals
- Excellent interpersonal skills
- Skills related to computer literacy
- Good knowledge of written and spoken English and fluency in Tamil
- Good organizational skills
- Methodical in work
- Team Spirit

**Desirable**

- Experience of working with children and understanding of child rights and child rights-based approaches to programming.
- Valid driving (motor bike) license

A competitive remuneration package awaits the selected candidate. The age limit at SCiSL is 60 years.

**Duration :**

The above position would be initially for a period of **01 year.**

Please note that all positions in SCiSL are subject to transfer.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before **10th of October 2005 to:**

**Save the Children in Sri Lanka**
**146, Temple Road, Nallur, Jaffna.**

(C45352)

* No telephone enquiries please.
* Only short listed candidates will be contacted.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தை கிராமத்தில் சிறப்புற நடந்த அங்குரார்ப்பண நிகழ்வு!

வலி.தென்மேற்கு,செப்.30

சில்லாலை சாந்தை கிராமத்தில் கடந்த புதன்கிழமை மின்சார விநியோகம், குடிதண்ணீர் விநியோகம்,பொதுமண்டபம் என்பன வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

சாந்தை விநாயகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஐ.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் புதிதாக நிறு வப்பட்ட மின்மாற்றியை திறந்து வைத்து சம் பிரதாய முறைப்படி மின்விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

அதனையடுத்து,முன்பள்ளியுடன் இணைக் கப்பட்டு புதிதாக நிறுவப்பட்ட பொதுமண்ட பத்தையும் ரவிராஜ் எம்.பி. திறந்து வைத்தார். குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் மேரிஜோசப் சாந்தசீலன் சம்பிரதாய முறைப் படி ஆரம்பித்து வைத்தார்.

சாந்தை சிற்றம்பலம் வித்தியாலய அதிபர் கு.ஜெகதீசன்,பண்டத்தரிப்பு பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் கி.குணரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.விநாயகர் சனசமூக நிலையச் செயலாளர் மு.விக்கினேஸ்வரன் நன்றியுரை நிகழ்த்தினார். (எ-135)

## கீழுழைப்புப் பட்டதாரிகள் நிலை: பொது நிர்வாக அமைச்சுடன் பேச்சு!

யாழ்ப்பாணம்,செப்.30

அரச சேவை கீழுழைப்புப் பட்டதாரிகளில் இதுவரை பட்டதாரி நியமனம் பெற்றுக்கொள்ளாதவர்களின் விவகாரம் குறித்து வடக்கு-கிழக்கு மாகாணப் பொது நிர்வாக அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்று கீழுழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜி.பற்குணராஜா தெரிவித்தார்.

இந்தப் பேச்சுகளின் பிரகாரம் இதுவரை பட்டதாரி நிரந்தர நியமனத்துள் உள்ளீர்க்கப்படாத கீழுழைப்புப் பட்டதாரிகளின் பெயர் விவரம் உடனடியாக மாகாண பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப் பப்படவுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட கீழுழைப்புப் பட்டதாரி கள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல் லூரிக்குச் சமுகமளித்து தமது பெயர் விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்றும் - சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (எ)


## மாட்டு வண்டில் சவாரிப்போட்டி

**காலம்: 02.10.2005 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம்: பிற்பகல் 3 மணி**

**இடம்: நீர்வேலி சவாரித் திடல்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், (சி-45362)(29-12-34)

அச்செழு சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகம்.


## மரண அறிவித்தல்கள்

### சின்னவி மரியதாஸ் (ஐயா)



அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் உடுவில், மல்வத்தையை வாழ்விடமாகவும் சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் தொண்ட சின்னவி மரியதாஸ் அவர்கள் நேற்று (29.09.2005) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற றோஸ்மலரின் அன்புக் கணவரும் சின்னவி - செபமாலை தம்பதியரின் அன்பு மகனும் நேசமலர், ஜேசுதாசன், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருமை நாயகம், மேபிள்இராணியற்கரசி (ரஜனி), நல்லதுரை (வவா) ஆகியோரின் மாம்னாரும் காலஞ்சென்ற தேவசகாயம், இரா சேந்திரம், எலிசபெத் (ராணி), லில்லிபுஸ்பம் ஆகியோரின் மைத் துனரும் றெஜிமோகன், நியூமன்ரஜித், பெனட்றோஸ்ரன், பெனட் றொசைறோ, பெனட்றொமன்ஸ் -நியூமன்சியா, றெயிலின்சியா, டயானா, பெனிட் றொஸ்னா ஆகியோரின் பேரனும் நிக்கொலஸ், ஆன்சி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி மல்வம் திருக் குடும்ப ஆலயத்தில் நாளை (01.10.2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.* (40584)(29-12-34)

தகவல்:
ஜேசுதாசன் (மகன்).

### வைத்திலிங்கம் நல்லதம்பி



சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த வைத்திலிங் கம் நல்லதம்பி (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் நேற்று (29.09.2005) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - நாயகப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகாலஷ்சுமி, பொன் னம்மா, துரைராசசிங்கம், செல்வராசா, நேசரத் தினம் ஆகியோரின் சகோதரனும் வைத்திலிங்கம், நடராசா, அரு ணாசலம் ஆகியோரின் மைத்துனரும் இலங்காதேவி, குணவதி (அமரர்), ஆச்சி கோயில் ஆகியோரின் அன்புத் தந்தையும் லோக ராசா, துரைச்செல்வம், கருணாகரன் ஆகியோரின் அன்பு மாம னாரும் திருமதி சொக்கலிங்கம், கோமதி, கோமதன், அருள்மதன், உதயகுமார், வேணுமதி ஆகியோரின் பாசமிகு பேரனும் வேணுகா, விதுசிகன் ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.09.2005) வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.* (40587)(29-12-34) பூட்டப்பிள்ளைகள், பெறாமக்கள்.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் நடைபெற விருந்த சாரணிய வழிகாட்டுநர் கூட்டம் எதிர் வரும் 6 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள் ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

* * *

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினத்தின் சேவையைப் பாராட்டி வடமராட்சி அதிபர்கள் சங்கம் ஏற்பாடு செய்த சேவை நலன் பாராட்டு விழா ஒத்திவைக்கப் பட்டுள்ளது என்றும் -

பாராட்டு விழா நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது. (எ)

## முதியோர் கௌரவிப்பு

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு அரியாலை அபிவிருத்திச் சங்கம் நாளை சனிக் கிழமை மாலை 4.30 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் முதியோர் கௌரவிப்பு விழாவை நடத்தவுள்ளது.

சங்கத் தலைவர் எஸ்.ரி. பத்மநாதன் தலை மையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்ட ஆலோசகர்குழு அணித்தலைவர் கலாநிதி க.குணராசா முதன்மை விருந்தினராகவும், கிராமசேவை உத்தியோகத் தர் இ.சேதுராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வின் விசேட நிகழ்வுகளாக அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் 'தெளிந்தது புத்தி' என்ற நாடகமும், அரியாலை ஜோதி கலாமன் றத்தினரின் 'திசைமாறும் பயணங்கள்' என்ற நாடகமும் இடம்பெறவுள்ளன. (ஓ- 203)


A/L 06 DAY

புள்ளி விவரவியல்

By:

T.தவசேகர்

சனி, ஞாயிறு

12.30 (சி-45315)

ஸ்ரான்லி றோட்,யாழ்ப்பாணம்.

D.C.A

மனோகரா யாழ்ப்பாணம்

சிம்பு, கோபிகா நடித்த

தொட்டி ஜெயா

காட்சிநேரம்:- பு.நே. 6.30, 9.30, (இன்று மட்டும்) (சி-44110)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இன்றுமுதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

ஜெயம் ரவி, கலாவன்மணி, வடிவேல் நடித்த

மழை

காட்சி: 7.00 9.30 (பு.நே.) (இன்று மட்டும்)

ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த

கஜினி

காட்சி நேரம்: 6.30, 9.30 (பு.நே.) (இன்று மட்டும்)

(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இன்று முதல் சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த

(இன்று மட்டும்)




ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் அண்மை யில் புளியங்கூடல் சந்தியில் மாதிரி விற்பனை நிலையம் ஒன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது. மேற்படி மாதிரி விற்பனை நிலையத்தை தீவகம்வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் நாடாவைவெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் சங்கத்தின் தலை வர் தி.சுந்தரலிங்கம் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர், ஊழியர்கள் காணப்படுகின்றனர். (படம்:ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)

## கண்ணீர் அஞ்சலி



மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்க முன்னாள் வங்கிச் சேவை முகாமையாளரும் பணியாளர் சிக்கன சேமிப் புக் கடனுதவு கூட்டு. சங்க முன்னாள் தலைவருமான

### து. முருகேசு

அவர்கள் 29.09.2005 அன்று இறைபதமெய்தியதையிட்டு, ஆழ்ந்த கவலையடைகின்றோம். இவரின் இழப்பினால் வருந்தும் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (சி-45361)(29-12-34)

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.ச.
பணியா. சிக்.சேமி.கட.கூட்டு.சங்க. அங்கத்தவர்கள்.

## துயர் பகிர்கின்றோம்

கடந்த 28.09.2005 அன்று இரவு மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட அலுவலகம் மீது இனந்தெரியாத குழுவினரால் நடத்தப்பட்ட கைக்குண்டு, துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகிப் பலியாகி அமரத்துவமடைந்த எமது பணியாளர் வேலுப்பிள்ளை அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளையும் இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும் பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். (சி-45363)(29-12-34)

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
முதன்மைச் செயலகம்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம், யாழ்.சாலை, கிளிநொச்சி.

## மரண அறிவித்தல்கள்

### காளியப்பன் இராமு



இந்தியாவைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட காளியப்பன் இராமு அவர்கள் நேற்று (29.09.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காளியப்பன் தம் பதியரின் அன்பு மகனும் சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சண்முகலிங்கம், சோதி லிங்கம், சோதிதாஸ், சோதிநாதன், ஜெகசோதி, கலைவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் செவ்வந்தி, சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனும் நகேஸ்வரன், நகேஸ்வரி ஆகி யோரின் மைத்துனரும் சகிலன், மதுமிலன், நிவேதிகா, சுடர்வண் ணன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2005) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய்வீதி,
சாவகச்சேரி. (40577)(29-12-34)

தகவல்:
குடும்பத்தினர்.

### துரைச்சாமி முருகேசு

*(ஓய்வுபெற்ற முகாமையாளர், கிராமிய வங்கி, பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)*



நாவலர் வீதி, மாதகலைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி முருகேசு அவர்கள் நேற்று (29.09.2005) வியா ழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி - குஞ் சரம் தம்பதியினரின் அன்பு மகனும் மல்லிகா தேவியின் அன்புக் கணவரும், து.கணபதிப் பிள்ளையின் அன்புச் சகோதரனும் த. ஞான சீலனின் பெரியதகப்பனாரும் ஞா. ரேவதியின் மாமனாரும் ஹரினியின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2005) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*மாதகல்.* (40576)(29-12-34) த.ஞானசீலன் (பெறாமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது சமாதான யோசனைகளை ஆராயும்படி ஜனாதிபதி சந்திரிகாவைக் கோருகின்றார் ரணில்

## நேற்று அவர் கடிதம் மூலம் வேண்டுகோள்

கொழும்பு, செப்.30

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐ.தே.கவும் இணைந்து பொதுவான அடித்தளம் ஒன்றை உருவாக்கவேண்டியவேளை நெருங்கிவந்து கொண்டிருக்கிறது. எனவே, இதற்கு ஏதுவாக நான் எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமாதானத்துக்கும், அதிகாரப் பரவலுக்கும், பகிர்வுக்கும் என முன்வைத்துள்ள யோசனைகளைப் படித்து ஆராயுமுகமாக அதனைத் தங்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றேன் என்று ஐ.தே.க. தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபன பிரதியொன்றை இணைத்து அனுப்பி வைத்து எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கடிதத்தை ரணில் விக்கிரமசிங்க நேற்று விசேட தூதுவர் மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தார்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி என்றவகையில் தங்களுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை அனுப்பிவைப்பதில் மகிழ்வடைகிறேன்.

சுபீட்சத்துக்கும், சமூக நீதிக்குமான யுகம் ஒன்றுக்கு அத்திபாரமிடும் வகையில் நிரந்தரமான, கௌரவமான சமாதானத்தை இலங்கையில் நிறுவும் நோக்கத்தோடு, அதில் 15ஆவது பிரிவில் நாம் பிரேரித்திருக்கும் யோசனைகள் குறித்து உங்களின் கவனத்தை விசேடமாகத் திருப்பும்படி கோருகிறேன்.

எங்களுக்குள் வேறுபாடுகள், இணக்கமின்மை இருந்தாலும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுமூலம் மட்டுமே நீதியான சமாதானம் சாத்தியம் என்று என்னைப்போலவே நீங்களும் கருதுவீர்கள் என சந்தேகத்துக்கு இடமின்றி நான் உறுதியாக நம்புகிறேன்.

மத்திக்கும் பிரதேசங்களுக்கும் இடையில் அதிகாரங்களைப் பகிரும் சமஷ்டி முறைக் கட்டமைப்பின் அடிப்படையிலேயே அதிகாரப் பரவலாக்கல் அமையவேண்டும் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவற்றுக்கு இடையில் ஒத்திசைவு நிலைப்பாடு இருந்து வருகின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் அத்தகைய கட்டமைப்பை ஏற்படுத்துவது குறித்து பிரஸ்தாபிக்கும் ஒஸ்லோ அறிக்கை மேற்படி எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஒஸ்லோ அறிக்கையின் மீதே எமது விஞ்ஞாபனம் வரையப்பட்டுள்ளது.

இலங்கையின் பெரிய இரண்டு கட்சிகளான - ஐ.தே.கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் பொதுவான நிலைப்பாடு ஒன்றை உருவாக்க வேண்டிய கட்டத்தை அமைதி முயற்சிகள் இப்போது அண்மித்திருக்கின்றன.

ஆகவே, ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐ.தே.கட்சியின் விஞ்ஞாபனத்தில் 15ஆவது பிரிவில் சமாதானத்துக்கும் அதிகாரப் பகிர்வுக்குமாக முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளை நீங்கள் ஆராய்வீர்களாயின் நன்றியுள்ளவனாக இருப்பேன். அதன்பின் அது குறித்து ஏதேனும் தெளிவுபடுத்தல்வேண்டுமாயின் தங்களுடன் நேரில் கலந்துரையாடத் தயாராக இருக்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் திசை திருப்பலுக்கான ஒரு விவகாரமாக சமாதான முயற்சிகள் மாறிவிடுவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது என்பது முக்கியமானதாகும். அதற்கு மாறாக, ஐ.தே.கட்சிக்கும் ஸ்ரீல.சு.கட்சிக்கும் இதுவிடயத்தில் உருவாகியுள்ள திடமான இணக்கப்பாட்டை மேலும் கட்டியெழுப்ப நாம் முயற்சிக்கவேண்டும்.

இந்த நேரத்தில் சந்தர்ப்பம் எமக்கு அளித்திருக்கும் வாய்ப்பை சரிவரப் பற்றிக்கொள்ள நாம் தவறுவோமானால் எதிர்கால சமுதாயம் நம்மை மன்னிக்காது.- என்று உள்ளது.

(எ-க)

## ஸ்ரீலங்கா சுதந்திரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைக்கவுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பல முக்கிய விடயங்கள் குறித்து இன்றைய மத்திய குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த பிரமுகரொருவர் கூறினார்.

ஏற்கனவே, ஜனாதிபதித் தேர்தலுக்காக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு அப்பால் சென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் உடன்பாடொன்றை செய்துள்ள நிலையில், இன்று நடைபெறவுள்ள மத்திய குழுக் கூட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் முக்கிய திருப்பங்களுக்கு வழிசெய்யப்படக் கூடிய பல முடிவுகள் எடுக்கப்படலாம் என்றும் கருதப்படுகின்றது.

(எ-க)

## ஐரோப்பிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியிலான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பது என்றும் - தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

நேற்றைய சந்திப்பில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அடுத்த மாதம் கூடி இது தொடர்பாக ஆலோசிப்பது என்றும் முடிவு எடுக்கப்பட்டதாகவும் - கூறப்பட்டது. (எ-3)

## இ.தொ.கா.முன்வைத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாருக்கு ஆதரவு என்பது பற்றிக் கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் கூறினார். ஆறுமுகன் தொண்டமான் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இ.தொ.கா. முன்வைத்த யோசனைகள் குறித்து ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் பேசினேன். எமது யோசனைகள் குறித்து பிரதமருடன் கலந்துரையாடிவிட்டுத் தாம் இறுதிப் பதில் தருவார் என ஜனாதிபதி என்னிடம் கூறினார். மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்ந்து வருகிறோம். நாம் முன்வைத்துள்ள பெரும்பாலான யோசனைகள் அந்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று கூறலாம்.

எவ்வாறாயினும் எமது முடிவை இன்னும் ஓரிரு தினங்களில் அறிவிப்போம். முடிவெடுப்பதில் தடுமாற்றமும், குழப்பமும் என்னிடம் இல்லை. நான் மிகத் தெளிவாகவே இருக்கிறேன். சரியான முடிவை அரை மணிநேரத்திற்குள் நான் எடுப்பேன். இப்போது கட்சியின் தொண்டர்கள், மாவட்டத் தலைவர்களைச் சந்தித்து அவர்களின் யோசனையையும் கேட்டு வருகிறேன்.-இவ்வாறு தெரிவித்தார் ஜூனியர் தொண்டமான்.

(எ-க)

## இன்று மாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் கடந்த மாதம் இடம்பெற்ற தமிழர் உரிமைப் பிரகடன மாநாட்டுக்கு வலுச்சேர்க்கும் வகையில் தமிழர் தாயக மாவட்டங்கள் தோறும் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வரிசையில் இன்று யாழ்ப்பாணத்தில் - பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நடக்கிறது.

இன்றைய தினம் வழமையான பணிகள் அனைத்தையும் நண்பகலுடன் நிறுத்திக்கொண்டு சகலரும் இந்த நிகழ்வில் பங்கேற்று தமிழ் மக்களின் ஏகோபித்த அபிலாஷைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

அரச செயலகங்கள், திணைக்களங்கள், கூட்டுறவு அமைப்புகள், வங்கிகள் அனைத்தும் இன்று நண்பகலுடன் மூடப்படும். பொதுச் சந்தைகள், வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் இன்று முழுநாளும் மூடப்பட்டிருக்கும்.

பொதுப்போக்குவரத்து பஸ்சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறும். பாடசாலைகள் வழமைபோன்று இயங்கும். ஆனால், குறித்த நேரத்துக்கு சற்று முன்னதாகவே பாடசாலைகளை மூடி ஆசிரியர்களும் மாணவர்களும் பொங்குதமிழ் எழுச்சியில் கலந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டிருக்கின்றனர்.

பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்ளுகின்ற மக்களுக்கான போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகள் பிரதேச ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

குடாநாட்டிலிருந்து மட்டுமன்றி தென்னிலங்கையில் இருந்தும் அரசியல்கட்சிப் பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என ஏராளமானோர் பொங்கு தமிழில் கலந்துகொள்கின்றனர்.

வெளிநாடுகளில் இருந்தும் பல முக்கிய பிரமுகர்கள் இதில் பங்கேற்பர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-எ-த)

## மூதூரில் இறைச்சிக் கடை உரிமையாளர் சுட்டுக்கொலை

திருகோணமலை மூதூரில் நேற்றிரவு 7.30 மணியளவில் இறைச்சிக் கடை உரிமையாளரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொலைசெய்யப்பட்டவர் 42 வயதுடைய அப்துல் சமது அப்துல் ஹக்கீம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வழமைபோல் தனது கடையை மூடிவிட்டு வீட்டிற்குத் திரும்புவதற்கு தயாராகிக்கொண்டிருந்த நேரம் எதிர்கொண்ட இளைஞரொருவர் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டுத்தப்பிச் சென்றுள்ளார் எனக் கூறப்பட்டது.

குறிப்பிட்ட நபரின் உடலில் 8 துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக மூதூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (எ)

## சு.கவின் கொள்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சமயம் வெளிநாட்டில் இருந்த ஜனாதிபதி இரண்டொரு தினங்களுக்கு முன்னரே நாடு திரும்பினார்.

அவர் நாடு திரும்பிய பின்னர் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது.

அந்த அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களுடன் தனியான கருத்துப் பரிமாற்றமொன்றை ஜனாதிபதி குமாரதுங்க மேற்கொண்டார்.

தேசியப் பிரச்சினை குறித்தும் நாட்டின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பிலுமான அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தக்கோரி ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தமக்கு எழுதிய கடிதத்தின் பிரதிகளை அப்போது ஜனாதிபதி சக அமைச்சர் மாரிடமும், பிரதமரிடமும் விநியோகித்தார்.

இதன்பின்னர் மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி தமக்குத் தெரியாமல் இவற்றில் ஏதும் மாற்றங்கள் இடம்பெற்றனவா என்றும் வினவியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்தக் கொள்கைகளை ஓரங்கட்டும் செயற்பாடுகள் இடம்பெறுவதைத் தாம் அவதானித்துக் கொண்டிருக்கிறார் எனக் குறிப் பிட்ட அவர், யாருக்காகவும், எதற்காகவும் கட்சியின் கொள்கைகளை மாற்றத் தாம் இடமளிக்கப் போவதில்லையென்றும் திட்டவட்டமாக கூறினார் என அறியவந்தது.

ஜனாதிபதி எல்லா விடயங்களையும் கொட்டித் தீர்க்கும்வரை மௌனம் காத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் அதன்பின்னர் ஜனாதிபதியிடம் விளக்கம் கூறமுற்பட்டனர். எனினும், ஜனாதிபதி குமாரதுங்க அதற்கு இடமளிக்காமல் நிராகரித்துவிட்டார். இதனால் கூட்ட முடிவில் சிறிதுநேரம் சூடான வாதப் பிரதிவாதங்கள் அங்கு இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப் படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை மீறிச் சென்று, இனவாதம் பேசி, எப்படி ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பணிகளை முன்னெடுப்பீர்களென அமைச்சர்மாரை நோக்கி கேள்வி எழுப்பிய ஜனாதிபதி, கட்சியை இனவாதிகளின் கூடாரமாக்குவதற்குத் தாம் தயாரில்லையென்றும் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

இதேவேளை, ஐ.தே.க. பிரதித் தலைவரின் கடிதத்தின் பிரதிகள் அமைச்சர்களுக்கு விநியோகிக்கப்பட்ட விடயம் அமைச்சர்மார் பலருக்கு அதிருப்தியை உண்டுபண்ணியிருப்பதாகக் கூறப்படுகிறது. (எ-க)


புலமைப் பரிசில் வகுப்பிற்கு தன்னிகரில்லா தனித்துவமான ஒரே நிறுவனம்
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
தரம் 5 புலமைப் பரிசில் - 2006 பயிற்சிப் பரீட்சை (40531)
தற்போது தரம் 4இல் கற்கும் மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை
முதலாவது பரீட்சை ஆரம்பம்: 02.10.2005 (ஞாயிறு) காலை 8.30 மணி
* வெளிமாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்.
* பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள் - வினாத்தாள்கள் தேவைப்படின் தொடர்புகொள்ளவும்.
புலமைப் பரிசில் வகுப்பு
பிரிவு 2 ஆரம்பம்: 01.10.2005 சனி பி.ப. 3 மணி



NEW SCIENCE CENTRE
INORGANIC பிரிவு-III
sat.sun. 12-1
ORGANIC பிரிவு-II
mon.fri. 12 - 1
(40586) வெப்ப இரசாயனம்
Sat., Sun. 10-11
BY: அன்பழகன் B.Sc.



CHEMISTRY GROUP CLASS
A/L (40565)
ஆரம்பம்: 01.10.2005 சனி 5.45p.m.
நாவலர் DIAS B.sc.(Hons)spl.
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



SCIENCE CENTRE
A/L DAY CLASS (40585)
CHE. - அன்பழகன் | Maths - ஜெயந்தன்
PHY. - பிரபா | Bio. - அல்போன்ஸ்



S.L.E.A.S
அதிபர் சேவை
தரம்- III
தரம் - 2-II
போட்டிப் பரீட்சை
வழிகாட்டல் வகுப்புகள் (40551)
ஆரம்பம்: 01.10.2005சனி(9a.m.)
D.C.S(திருநெல்வேலி)



வெளிவந்துவிட்டது
Information Technology 2005/2006
J.Pratheepan B.Sc (Hons)
Lecturer in Information Technology
Sri Lanka Institute of Advanced Technical Education
தொடர்பு: 0779586866



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail: reservations@expoavi.com, jaffna@expoavi.com
(c.44888)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.